தூயவனின் நினைவு நாளில்

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 18—6—1978 | இதழ் 40

கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

ஆறு ஆண்டுகள் ஆகின்றன நமது அருமை உடன்பிறப்பு தளபதி பிரதாபசந்திரனை இழந்து! தி. மு, கழகத்தின் துணையோடும் தூய ஒத்துழைப்போடும் வெற்றி பெற்று மத்திய அரசில் அமைச்சராகிவிட்டிருந்த ஒருவரின் மறைமுகத் தூண்டுதலோடு, கழகச் சார்புடைய தொழிற் சங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைக் கிளர்ச்சியின் தொடர்பாக, ஒரு நாள் சூழ்ச்சிக்காரர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டு, குருச்சேத்திரப் போரில் அபிமன்யூ கொல்லப்பட்டது போல வீழ்த்தப்பட்டான் பிரதாபச்சந்திரன்! வீடணனால் காட்டிக் கொடுக்கப்பட்ட இந்திரஜித்தன் சாய்ந்தது போலவும் — சுக்ரீவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட வாலி சாய்ந்தது போலவும் — அந்த வாலிப வைரம் வெறியர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு நொறுக்கி எறியப்பட்டது. அந்தத் தீரனின் குடும்பத்திற்குக்கழகமும், கழகச் சார்புடைய தொழிலாளர் அமைப்புகளும் தங்களால்இயன்ற உதவியினைச் செய்து நன்றிக் கடனை ஆற்றின என்ருலும் அவனது இழப்பினுல் பெருக்கெடுக்கும் கண்ணீர் நதி கரை புரண்டல்லவா ஓடிக் கொண்டிருக்கிறது!

கழகத்தைத் தாங்கும் தூண் என்று சொல்லத் தக்க உருவம்! உயரம்! வடிவம்! உள்ளம் — எல்லாமே அமைந்தவன் தான் மறைந்துவிட்ட அந்த மாவீரன்!

அவன் நினைவு நாள் நிகழ்ச்சியை நடத்துகிற நேரத்தில், அவனுக்குக் கவிதாஞ்சலி இசைக்கிற நேரத்தில் அவன் ஈடுபட்டு இன்னல்களுக்கு நடுவே நடத்திய நமது தொழிற்சங்கப் பேரியக்கத்தைக் கட்டிக் காக்கும் சூளுரையை அனைவரும் மேற்கொண்டாக வேண்டும்.

நமது தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை வளரும் வலிவுடனும், அசைக்க முடியாத கட்டுக் கோப்புடனும் இன்று விரிவடைந்து கொண்டிருக்கிறது. இன்று தமிழகத்தில் நடைபெறும் தொழிலாளர் விரோத அரசைத் தொழிலாளர்கள் அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். தங்கள் கோரிக்கைகளுக்காகப் போரிடும் தொழிலாளர்களை அறவே நசுக்குவது — அவசரச் சட்டம் போட்டு மிரட்டுவது — தொழிற்சங்கத் தலைவர்களுடன் சமரசம் என்ற நாடகத்தை நடத்தி, அவர்களை விருந்துக்கும் அழைத்துவிட்டு, மறுநாள் அவர்களைக் கேவலமாகக் கேலி பேசுவது, வழக்குகளைத் திரும்பப் பெறமுடியாது என்று வஞ்சினம் கூறுவது - ஆளுங்கட்சியின் ஆட்களைக்கொண்டு அடிப்பது உதைப்பது — இத்யாதி கொடுமைகளின் ஊற்றுக் கண்ணுக இன்றுள்ள எம். ஜி. ஆர். அரசு விளங்குகிறது!

மிகப் பிரபலம் வாய்ந்த —தீவிரம் பாய்ந்த நெஞ்சுடைய தொழிற் சங்கத் தலைவர்கள் இருக்கின்ற கட்சிகள்கூட, தேர்தல் உறவுகளை மனதில் எண்ணிக்கொண்டு, உமிழ்ந்த வாய்க்குச் சர்க்கரை கொட்டும் திருப்பணியில் உழன்று கொண்டிருக்கின்றன.

இந்திரா காந்தியின் அவசரச் சட்டங்கள் தொழிலாளர் குரல் வளையை நெறிப்பதாகும் என்று இடிமுழக்கம் செய்த தொழிலாளர் தலைவர்கள் சிலர், அதே போன்ற ஒரு சட்டத்தைத் தொழிலாளர்கட்கு எதிராக எம். ஜி. ஆர். ஆட்சி பிரகடனம் படுத்தியிருப்பதைக் கண்டிப்பதுபோல உதட்டை அசைத்தார்களே தவிர, அந்தச் சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டுமென்று வலியுறுத்தும் அழுத்தமான மனப் போக்கை வெளிக்காட்டிக் கொள்ள முன்வரவில்லை. என் செய்வது; அதற்குள்ளாக மாநகராட்சித் தேர்தல்-மதுரையிலே வந்துவிட்டதே! உரக்கப் பேசினுல் உறவல்லவா கெட்டுப்போய் விடும்!



மற்றவர்கள் வாய் மூடிக் கிடக்கட்டும்; அதற்காகக் கழகத்தின் தொழிலாளர் பேரவை வாளாவிருந்திட இயலாது! தொழிலாளர் பேரணியைத் திரட்ட வேண்டும்- அரசின் தொழிலாளர் விரோதப் போக்கினை எதிர்த்திடும் மற்றக் கட்சிகளின் சார்புடைய தொழிற் சங்க அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு தொழிலாளர்களின் சக்தியை ஒன்று திரட்டிக் காட்ட வேண்டும்.

நியாயமான கோரிக்கைகளுக்காக அறப்போர்க் கிளர்ச்சிகளில் ஈடுபடும் எந்தத் தொழிற்சங்கங்களுடனும் துணை நின்று தொழிலாளர் ஒற்றுமையைக் காட்டிடத் தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர்கள் தவறியதே கிடையாது.

யார் முதலில் முன் நின்று குரல் கொடுப்பது என்பதல்ல பிரச்சினை! அக்கிரமச் சட்டங்களைக் கண்டித்து யாரும் குரலே கொடுக்காமல் இருந்து விட்டால், தொழிலாளர்கள் பொட்டுப்பூச்சிகளாக ஆக்கப்பட்டுவிடுவார்கள். ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலிவேஷம் போடுவதை நிறுத்தமாட்டார்கள்!

(12-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி வளர்ப்போம்

'தினமணி'யும் புறநானூறும்!

கடந்த வார 'நம் நாடு' இதழில் கலைஞர் அவர்கள் 'இன்னுமா இனஅழிப்பு வேலை? உணர்வு படைத்தோர், உடன் செயல் படுக!' என்னும் தலைப்பில் உடன் பிறப்புக்களுக்கு எழுதிய கடிதத்தின் எதிரொலியே இந்தக் கட்டுரை.

இதேபோன்று, இலக்கிய அணியினரும், இன உணர்வுகொண்ட புலவர் பெருமக்களும் எழுதி அனுப்பிய வண்ணமிருக்கின்றனர். தொடர்ந்து அக்கட்டுரைகளெல்லாம் 'நம் நாடு' இதழில் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

'தினமணி' புறநானூற்று ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறது! தமிழர்களுக்கு அண்மைக் காலங்களில ஏற்பட்டு வரும் வேதனைகளில் இதுவும் ஒன்று!

"தமிழ்நாட்டின் பொற்காலத்தை மட்டுமா புறநானூறு காட்டுகிறது? அப்பொற்காலத்தினிடையே "புரையோடிக் கிடந்த குறைபாடுகளையும்" அது சுட்டிக் காட்டத் தவறவில்லை" என்கிறது 'தினமணி'க் கட்டுரை

முடியுடை வேந்தர்கள் முறைபிறழாது ஆட்சி செய்தனர் என்று அறிகிறோம்; ஆயினும்; "முறை தவறிய" சில நிகழ்ச்சிகளையும் புறநானூறு காட்டாமல் விடவில்லை! — இது 'தினமணி'யார் எடுத்து நிறுத்த விரும்பும் வாதம்!

அதற்குக் காட்டப்படும் ஆதாரங்கள் யாவை என்று எண்ணிப் பார்த்தால், யாவும ஆழமற்ற சிந்தனையும் குற்றஞ் சுமத்த வேண்டுமென்ற மனப போக்கும், எப்படியும் இழிவு படுத்திக் காட்டிவிட வேண்டும் என்ற ஆதங்கமும் உடைய ஆதாரங்களாகவே இருக்கின்றன.

'முடியுடை வேந்தர்களும் சிற்றரசர்களும் தமக்குள் ஒற்றுமையின்றி எப்போதும் போரில் ஈடுபட்டு, தமிழ் மண்ணில் குருதி ஈரம் புலராமல் பார்த்துக் கொண்டனர்!"

'தமிழ் மன்னர்கள் இப்படித் தமக்குள்ளே போரிட்டுக் கொண்டனரே. தகுமா?' என்கிறது தினமணி.

அதைப் படிக்கிறவர்கள் மேம் போக்காகப் பார்க்கிற போது ஏதோ பெரிய தவற்றினைப் புதிதாகக் கண்டு பிடித்துச் சுட்டிக் காட்டி விட்டது போலத் தோன்றும்!

போர் என்றவுடன் இந்நாளில் பொது மக்களையும், மருத்துவ மனையிலே இருக்கும் நோயாளிகளையும் கோயில், கிறிஸ்துவ ஆலயம், மசூதிகளிலே தொழுகை நடத்தும் மக்களையும் குண்டு வீசி அழிக்கும் — இன்னல் நிறைந்த — முறையற்ற போரினையே நினைக்கத் தோன்றும்.

மூவேந்தர்களானாலும் சிற்றரசர்களானாலும் தமிழ் நாட்டிலே நடத்திய போருக்குக்கூட இலக்கணம் உண்டு!

இலக்கணம் வகுத்து — முறைப்படுத்தி — அந்த முறையிலிருந்து அணுவளவும் பிறழாமல் — நேருக்கு நேர் நின்று போரிடுவதற்கென்று தங்களைத் தாங்களே ஒப்படைத்துக் கொண்டவர்கள்தாம் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டனரே அல்லாமல் பொதுமக்களைத் துன்புறுத்தும் போரினை நடத்திடவில்லை!

ஆவையும், ஆவின் இயல்டைய பார்ப்பன மாக்களையும, பெண்டிரையும, பிணியுடையவரையும, பிள்ளைகள் இல்லாதவர்களையும் விலகியிருக்கச் செய்து வீரர்களுடன் வீரர்கள் போரிட்டுக் கொள்வது என்பதை 'தினமணி' ஏன் ஒரு குறைபாடாகக் குறித்துக் காட்ட விரும்புகிறது? ஆவின் இயல்புடைய பார்ப்பன மாக்கள் என்று அன்றைக்குத் தினமணி மூதாதையர்களைத் தனியிடத்தில் ஒதுக்கிப் பாதுகாப்பளித்துப் பத்திரப்படுத்தியதற்குக் காட்டும மரியாதையும, நன்றியுணர்வும் இதுதானா என்று நாம் கேட்டால, 'தினமணி' ஏ.என்.எஸ் — அவரே குறித்திருப்பதுபோல, உணர்ச்சி வயப்படாமல் எண்ணிப் பார்ப்பார் என்று நம்புகிறோம்.

வலிந்து போருக்கு எழுவார்கள் தமிழ் மன்னர்கள் என்று ஒரு குற்றச்சாட்டு! அதனைத் தொடர்ந்து, ஐந்திணை நெறியைக் காற்றில் பறக்கவிடுவர் என்று ஓர் அறிவுத் தெளிவற்ற தூற்றுதல்! ஒரு மன்னனிடம் போர் செய்யக் கருதினால் அவன் பெண்ணைக் கேட்பார்களாம்! பெண் இல்லையென்றால் யாரைக் கேட்பார்களோ! அவன் பெண் தர மறுத்தால் அன்புடைக் காமம் என்று ஐந்திணை நெறிவளர்த்த தமிழ்ப் பண்பாட்டைக் காற்றில் பறக்க விடுவார்களாம்! பொருந்தாக் காமம் ஆகிய பெருந்திணை நெறியை மேற்கொள்ள முனைவராம்! விருப்பமில்லாத மாற்றரசன் மகளை — காதலுக்காக அல்ல, மோதலுக்காக மணக்கத் துடிப்பராம்! — ஆழ்ந்த தமிழறிவு இல்லாமையால் எழும் வாதம்!

தமிழில் மறம் என்றொரு 'துறை உண்டு. ஒருவன் வந்து பெண்கேட்டால், பெண்ணைப் பெற்றவன், கேட்பவனுக்குத் தன் பெண்ணை மணக்கும் தகுதி உண்டா என்று எண்ணிப்பார்க்கும் கடமை உண்டு. அப்ப்டி எண்ணிப் பார்க்கிற போது, பெண் கேட்பவனுக்கு அந்தத் தகுதி இல்லை என்று தோன்றினால் தரமுடியாது என்று மறுப்பான்! தன் குடும்பம் வீரமிக்கக் குடும்பம்! இந்தக் குடும்பத்தில் பிறந்த பெண்ணை மணக்க உனக்குத் தகுதியில்லை. 'எனவே பெண் தரமுடியாது' என்று மறுப்பான்! கேட்டவன் தன் தகுதியை நிலைநாட்ட — அவனே அரசனாயின் — பெண்ணைப் பெற்றவனும் குடும்பப் பெருமையும வீரப் பெருமையும பேசுகிற காரணத்தாலும் அரசனாகவும் இருக்கிற காரணத்தாலும், போர் தொடுத்தே தீருவான். ஒருவன் இன்னொருவனின் தகுதி — வீரம்பற்றிக் குறை சொல்வதனால் எழும் போராக அது முடியும். அப்போது பெண் கேட்பவனின் ஆற்றலை — பெண்ணைப் பெற்றெடுத்தவன் உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். வென்றால் பெண்ணை மணப்பான்!

இது எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய குழப்பமற்ற தெளிவான செய்தி! போரில் வெற்றிபெற்ற வீரனின் மீது — வீரக்குடியிலே பிறந்த ஒரு பெண்ணுக்கு ஒரு மரியாதையும் அன்பும் ஏற்படுவது இயல்பு. எனவே வெற்றி பெற்றவனுக்கு அவளும் மாலையிடத் தயங்கமாட்டாள்,

ஏதோ ஒரிரு நேரங்களில் மட்டும்தான் இப்படி நடக்கும்! மகள் தர மறுக்கிற நிலையை 'மகட்பாற் காஞ்சி' என்ற துறையாகப் புறநானூறு போற்றுகிறது. பெண் இருக்கிற இடங்களிலெல்லாம் 'மகட்பாற் காஞ்சித்' துறையாக இருந்தது என்று சொல்லிவிடுவதா?

சொல்லப்போனால், "எங்கள் பெண் உனக்கு மாலையிடுவாள்! நீ உன் வீரத்தை நிலைநாட்டு பார்ப்போம்!" என்று கேட்பதுதான். 'மறம்' என்ற துறையின் உட்பொருள்!

பெண்ணே அந்தத் தலைவனை விரும்பி அவனோடு களவொழுக்கத்திலே ஈடுபட்டு — ஐந்திணை நெறி நிற்கத் துடித்தால்கூட, அவளைப் பெற்ற தந்தையும் அவள் அண்ணன் தம்பியரும்; அவளை மணக்கிற தகுதி, பெண்ணைக் கேட்பவனுக்கு உண்டா என்று ஆராய்ந்த பின்னரே பெண் தர முன் வருவர்!

இவற்றையெல்லாம் ஆழமாக எண்ணிப் பார்க்கிறபோது. போர் தொடுப்பதற்காகவென்று எவனும் பெண் கேட்கமாட்டான் என்பதும். பெண்தர மறுப்பதும் போர் மூளட்டும் என்கிற கருத்திலே அல்ல என்பதும் தெளிவாகும்!

போர் தொடுக்க நினைத்தால், தன் தூதுவனை அனுப்பி இன்ன நாளில், இன்ன இடத்தில் போர் என்று தன் எதிரிக்கு அறிவித்துவிட்டுத் தொடங்குவதுதான் தமிழர் வழக்கம்! அதுதான் இன்றளவும் — இந்திரா காந்திக்குக் கறுப்புக் கொடி இன்ன நாளில் — இன்ன இடத்தில் — இன்னின்னார் காட்டுவர் என்ற அறிவிப்போடு கலைஞர் கறுப்புக் கொடிப் போராட்டத்துக்கு அறிவிப்புச் செய்தாரே அந்த வகையில் தமிழர்களால் கடைபபிடிக்கப்பட்டு வருகிற வழக்கமாகும்!

அதுமட்டுமல்ல தமிழ் மன்னர்கள் போர் தொடுக்க நினைத்தால் பசுவைப் போன்ற இயல்புடைய பார்ப்பனமாக்களும் பெண்டிரும், பிணியாளர்களும், வாரிசுகள் இல்லாதவர்களும உங்களுடைய பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று சேர்ந்துவிடுங்கள் என்று அறிவிப்பு கொடுப்பார்கள். அந்த அறிவிப்பைக் கேட்டு அதன்

புலவர் கோ. அண்ணாமலை எம்.ஏ.

படி நடக்க இயலாத பசு முதலியவற்றைத் தங்கள் நாட்டுக்கு ஓட்டிவந்து பத்திரப்படுத்துவர்! அப்படிப்பட்ட அறநெறியுடன் கூடிய போர்முறை — பெருமிதமுடைய போர்முறை புறநானூற்றில் பேசப்படுகிறது.

"ஆவும் ஆனியல் பார்ப்பன
மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும்
பேணித்
தென்புல வாழ்நர்க்கு
அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்
பெறாஅதீரும்
எம்அம்பு கடிவிடுதும்
நும்மரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை
மறம்"

— என்பதனைத் தெளிவாக 'தினமணி' புரிந்துகொள்ள வேண்டும்.

காளையை வளர்த்து அதை யாரொருவர் அடக்குகிறாரோ அவரே இவளை மணப்பவர் என்று முறை வகுத்து, அந்தக் காளையை அடக்குகின்ற காளைக்குத் தன் மகளை மணமுடித்துக்கொடுத்த செய்தி 'முல்லைக் கலி' முழுவதும் பேசபபடும.

பெண் கேட்க வருபவனைக் காளையை விட்டுக் கொல்லப் பார்க்கிறான் பாவி என்று திசை திருப்புவது?

ஒன்றிலே அமைந்துள்ள உட்கருத்தைவேண்டுமென்றே திசை திருப்ப நினைப்பதால் தினமணிக்கு என்ன நன்மை என்றுதான் நமக்கு விளங்கவில்லை.

தமிழ், தமிழன், தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணமென்று இவற்றைப்பற்றியெல்லாம், தமிழ் நாட்டில் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு உணர்வுப் பூர்வமான எழுச்சி பேரறிஞர் அண்ணாவாலும் கலைஞர் அவர்களாலும் உருவாக்கபபட்டிருப்பதைப் பார்க்க தினமணிக்குப் பற்றி எரிகிறது! அதன் விளைவுதான். உண்மையைச் சொல்லுவதுபோல, தமிழர்க்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் அழுக்கேற்றும் இழிசெயலில் தினமணி இறங்கியிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது!

"மயிலுக்குக் குளிர் என்று போர்வை தந்த பேகன், தன் மனைவியைத் தவிக்க விட்டு வேறொரு பெண்ணை நாடலாமா? இது பண்பாடா?" என்று கேட்கிறது தினமணி.

பேகன் என்னும் தனி மனிதனின் தோல்வியாகக் கூட அதனை எண்ணலாம். ஆனால் அது மொத்தத் தத்துவத்தின் தோல்வியன்று. மனைவியைத் தவிக்கவிட்டு மற்றொரு பெண்ணை நாடியதை சமுதாயம் முழுவதும் வரவேற்றிருந்தால் மொத்தத் தமிழ்ச் சமுதாயமே பண்பாடற்றது என்றுகூட எண்ணலாம. ஆனால். நிலைமை என்ன? கபிலர், பரணர், அரிசில் கிழார் போன்ற புலவர்கள் எல்லாம் பேகனை — அவனுடைய அரசன் என்கிற நிலையைக் குறித்துக் கொஞ்சங்கூட கவலைப் படாமல் கண்டித்திருக்கிறார்கள். 'நீ உன் மனைவியின் கண்ணீரைத் துடைத்திடல் வேண்டும்! அதுவே யான் வேண்டும் பரிசில்' என்கிறார் ஒரு புலவர்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகிற சிறிய தவறுகளை, தனி மனிதனின் தோல்விகளை அந்தச் சமுதாயத்தின் மீதேற்றி, மொத்தத் தமிழ் மக்களின் பண்பாடே இவ்வளவுதான் என்று நிலைநாட்ட வேண்டுமென்கிற அரிப்பு தினமணிக்குத் திடீரென்று ஏற்பட என்ன காரணம்? தமிழர்களிடையே கடந்த சில ஆண்டுகளாக 'மிகுந்து' காணப்படும் தமிழ் உணர்வுதானோ?

(தொடரும்)

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
காம்நாடுவோர்தவறுமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை. மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை. 72 CL வன்ஹால்ரோடு, மதுரை.

★ தங்கமே தங்கம்...! ★

கோரத்தாண்டவம்புரிந்த இந்திரா என்ற அரசியல் காளியைக் காலி செய்வதற்காகவே கருத்து வேறுபாடுகள் கொண்ட கட்சிகள் ஒரே அணியில் வந்து நின்றன. அப்படி உருவான புதிய கட்சி, தான் இந்த மண்ணின் மக்களிடமிருந்து உதித்ததாகக் கூறி தன்னை ஜனதாக் கட்சி என்று பிரகடனப்படுத்திக் கொண்டது

எந்த ஜனநாயகத்தைக் காப்பதற்காக 'ஜனதா கட்சி' தோன்றியதோ, எந்த மக்களின் வறுமைப் பிணியை நீக்குவதாக வாக்களித்ததோ, எந்தக் கொள்கைகளைச் சொல்லி ஜனதாக் கட்சி அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்கிறதோ, எந்த இலட்சியங்களை ஈடேற்றுவதாகப் பதவியேற்ற போது உறுதிமொழி உரைத்ததோ அந்த ஜனநாயகத்திற்கு, அந்த மக்களுக்கு, அந்தக் கொள்கைகளுக்கு, அந்த இலட்சியங்களுக்கு விரோதமான பாதையிலேயே பயணம் செய்து கொண்டிருக்கிறது அந்தக் கட்சி.

ஜனதாவின் தலைவர்கள் தங்களுக்குள் இருக்கிற கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கே காலம் போதாது என்று கருதும் போது, நாட்டின் பிரச்சினைகளை நோக்கி அவர்கள் சிந்தனை எப்படிச் செல்லும்?

ஜனதா அரசின் பொருளாதாரக் கொள்கைகள் அவர்கள் அறிந்தோ அறியாமலோ இந்த நாட்டின் மேட்டுக் குடியினருக்கு மட்டுந்தான் மேலும் நலஞ்சேர்ப்பதாக அமைகின்றனவே அல்லாமல் இந்த நாட்டின் அடித்தட்டு மக்களைப் பற்றி அணுவளவும் கவலைப்படுகின்றனவாய்த் தெரியவில்லை.

ஜனதாவின் 'சாம்ராச்சியத்தில்' முதலாளிகளுக்கென்றே ஒரு முகாம் இருப்பது தவிர்க்க முடியாததாகவும், தடுக்க முடியாததாகவும் ஆகிவிட்டது. எனவே ஜனதா அரசின் பொருளாதாரக் கொள்கைகளும் முதலாளிகளின் நலங்காப்பவையாகவும், கீழ்த்தட்டு மக்களைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாதவையாகவும் ஆகிவிட்டன. அதன் திட்டமும் செயலும் முரண்பாடுகளாய் முடிந்துகொண்டிருக்கின்றன.

கடந்த பல ஆண்டுகளாகக் கள்ளக் கடத்தல் மூலம் கைப்பற்றிய தங்கத்தையும் அரசின் கருவூலத்தில் அடங்கிக் கிடந்த தங்கத்தையும் ஏலமிடுவதற்கு ஏற்பாடு செய்தது மத்திய அரசு. அரசுக்குச் சொந்தமான 4500 டன் தங்கமும் கள்ளக் கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றிய தங்கமும் இந்திய நாட்டில் இருக்கிறது. மொத்தம் 6000 டன் என்பது 75 கோடி சவரன் தங்கமாகும். ஜனதா அரசு தனது பற்றுக்குறை பட்ஜெட்டை ஈடு செய்வது எவ்வாறு என்று பொருளாதார நிபுணர்களைப் போய் கேட்டது.

அரசாங்கக் கருவூலத்தில் அடங்கிக் கிடக்கிற தங்கத்தை அணிகலன்களாகச் செய்து அரபு நாடுகளுக்கு விற்று விடுமாறு சொன்னார்கள் அந்தப் பொருளாதாரப் புலிகள், ஜனதா அரசுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ஏனென்றால் தங்கத்தின் சர்வதேச விலையை விட தங்கத்தின் இந்திய விலை அதிகம். இப்போதிருக்கும் நிலையில் அரபு நாடுகளுக்குத் தங்கத்தை விற்றால் அதிகமாக இழப்பு ஏற்படும் என்று மத்திய அரசு மயங்கியது. நிதியமைச்சர் படேல் விட்ட பெருமூச்சில் கருவூலத் தங்கமே கருகியிருக்கும். இரவு பகலாகச் செய்த சிந்தனைகளுக்குப் பிறகு முக்கிய முடிவெடுத்தனர் மூத்த தலைவர்கள்.

முதலில் இந்தியாவில் தங்கத்தின் விலையைக் குறைப்பது; குறைந்த பிறகு அதிகத் தங்கத்தை அரசே வாங்குவது. அதில் அணிகலன்கள் செய்வது அரபுக்கு விற்பது. இலாபம் ஈட்டுவது; உபரி பட்ஜெட் காட்டுவது; இவைகளெல்லாம் ஜனதா அரசு கண்ட கனவுகள்; அவர்கள் கையில் வெண்ணையிருந்தது. கொக்கு, அரபு நாட்டில் மேய்ந்து கொண்டிருந்தது. பாவம், கொக்கின் தலையில் வைப்பதற்குள் வெண்ணெய் அவர்கள் கையிலேயே உருகி விட்டது.

இந்த நாட்டு முதலாளிகளைப்பற்றி ஜனதா அரசு சரியாக எடை போடாததை எண்ணும்போதுதான் பொருளாதார நோக்கில் அதன் அறிவீனம் புலப்படுகின்றது. தங்கத்தை ஏலம் விடுவோம். முதல் நாள் மட்டுந்தான் கொஞ்சம் ஆசையோடு தங்கத்தை அள்ளிக் கொள்வார்கள். அடுத்த நாள் ஏலங் கேட்டு அங்கே சிட்டுக் குருவிகூட வராது; தங்கத்தின் விலை தளரும். பொருளாதார நிலை வளரும் என்றெல்லாம் மனப்கணக்கும். வீட்டுக் கணக்கும் போட்டுப் போட்டுப் பார்த்துத் தங்கத்தை ஏலத்திற்கு விடுவதென்று ஏக முடிவு செய்தனர் கதம்பக் கட்சிக்காரர்கள். கண்ட கனவு நல்ல கனவுதான். ஆனால் கனவுக்குப் பலன் அவர்கள் கையிலா இருக்கிறது? அவர்கள் ஆப்பிளுக்காகக் கனவு கண்டார்கள். ஆனால்; பாவம் எட்டிக் கனியைத்தான் பறித்தார்கள்.

இந்தியாவின் ரிசர்வ் வங்கி மே திங்கள் ஐந்தாம் நாள் இந்தியத் தங்கத்தை ஏலம் விட்டது. முதல்நாள் விட்ட ஏலத்தில் பத்துக் கிராம் சராசரி அறுநூறு ரூபாய்க்கு விலை போனது. நிதியமைச்சர் பட்டேல் நிமிர்ந்து பார்த்தார். விட்ட ஏலத்திற்கு விளைவு என்ன என்று விசாரித்தார். தங்கத்தின் விலை சரிந்திருக்கும் என்று சத்தியம் செய்தார். அந்தோ பரிதாபம்! அறுநூற்றைம்பது ரூபாய்க்கு ஏலம் எடுத்த தங்கம் அன்று மாலையே ரூபாய் 685—க்கு ஏறிவிட்டது. அடுத்தநாள் நிலைமை அதைவிட மோசம். மூன்று நாட்களில் ரூபாய்

சா. கணேசன்

705-லிருந்து 720-க்கு புலிப் பாய்ச்சல் போட்டுப் போய்விட்டது.

ஜனதா அரசு, தான் போட்ட திட்டம் தடம் மாறியது கண்டு தடுமாறியது. பாவம் நிதி அமைச்சர், அவர் வைத்த கணக்குத் தேர்வில் அவரே தவறிவிட்டார். எவ்வளவு பெரிய பிழை செய்துவிட்டார்கள்! இந்த நாட்டு முதலாளிகளின் பண பலத்தை எவ்வளவு கேவலமாக எடை போட்டு விட்டார்கள். ஜனதா அரசையே ஏலம்விட்டால்கூட அதை ஏலத்திலெடுத்துவிட வடநாட்டு முதலாளிகள் வரிசையாய் வந்து நிற்பார்கள் அரசு அச்சடித்த நோட்டுகள், உலர்வதற்கு முன்பே விரல்விட்டு எண்ணக் கூடிய சில முதலாளிகளின் இரும்புப் பெட்டிகளுக்குத் தானே குடி போகின்றன.

என்ன இருந்தாலும், இந்திய முதலாளிகளை இவ்வளவு கேவலமாக எடை போட்டிருக்க வேண்டாம் ஜனதா அரசு இந்த நாட்டின் ஐந்தாண்டு திட்டங்கட்கு முதலீடு செய்யப்பட்ட தொகைகளின் கணிசமான பகுதிகளெல்லாம், முதலாளி வீட்டு முற்றங்களுக்குச் சென்றுவிட்டன என்பது ஜனதா அரசுக்குத் தெரியாதா?

இலாப வேட்டை ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு வாழும் வணிக வேங்கைகள், மக்களின் ரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சி கொழுத்து, கறுப்புப் பணத்தைக் காவல் காத்துக் கொண்டிருக்கின்றன என்பது காந்தியத்தின் வழி வந்தவர்களுக்கு விளங்கவே இல்லையா?

பத்து கிராம் தங்கத்தை ஆயிரம் ரூபாய் வரைக்கும் ஏலங் கேட்கவும். எப்படியும் தம்மிடமுள்ள கறுப்புப் பணத்தைத் தங்கமாக மாற்றிவிட வேண்டும் என்னும் தாகத்தோடு திரிகிற முதலாளிகளின் முகங்கள் வயதான தலைவர்களின் விழிகளுக்கு வெளிச்சமாகவில்லையா?

தங்கத்தின் விலை சட சட வென்று சரியும் என்று எதிர்பார்த்து, உச்சாணிக் கிளையில் உட்கார்ந்திருந்த ஜனதா அரசு, விளைவை எண்ணி வெட்கப்பட்டதா? வேதனைபட்டதா? குறைந்த அளவு தனது திட்டத்தை மறுபரிசீலனையாவது செய்ததா? இல்லை. இல்லவே இல்லை. இதிலிருந்து எதைத் தெரிந்து கொள்வது? ஜனதா அரசின் போக்கினை எப்படிப் புரிந்து கொள்வது?

விளைவை எதிர்பாராமலே ஏலத்திற்கு விடப்பட்டதா?

அப்படியானால். அரசுக் கருவூலத்தில் அடங்கியிருந்த தங்கத்தை முதலாளிகளின். கறுப்புப் பண முதலைகளின் பெட்டிகளுக்கு இடம் மாற்றச் செய்யப்பட்ட அதிகாரபூர்வமான ஏற்பாடா இது?

தங்கத்தின் விலையை மேலும் உயர்த்தி, அதைக் கீழ்த்தட்டு மக்கள் தொடமுடியாத உயரத்தில் தூக்கி வைப்பதுதான் ஜனதா அரசின் உள்நோக்கமோ?

யாருக்குந் தெரியும்? ஜனதா அரசின் பொருளாதாரக் கொள்கை நிதியமைச்சருக்காவது தெரியுமோ? தெரியாதோ?

நாம் தங்கத்தை ஏலம் கேட்கவில்லை — ஆனால் ஒரு முறையல்ல — இருமுறையல்ல — மூன்றாவது முறையுமல்ல — பலமுறை கேட்கிறோம் — "தங்கத்தை ஏலம்விட்ட ஜனதா அரசே அதன் விளைவை எதிர்பார்த்ததா? எதிர்பார்க்கவில்லையா?

ஜனதா அமைச்சர்களை 'தங்கக் கட்டிகள்' என்றுதான் மக்கள் நினைத்தார்கள் — இப்போதல்லவா தெரிகிறது 'மண்ணாங் கட்டிகள் என்று.

பாரதி ஒரு பாட்டுப்பாடினான் —

கண்ணன் மனநிலையைத் தங்கமே—தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்!
—என்று!

இப்போது இதை மாற்றிப் பாடலாம்

"ஜனதா மனநிலையை தங்கமே தங்கம்
கண்டு சொல்ல வேணுமடி
தங்கமே தங்கம்' —என்று

இங்கல்ல - அங்கு!

இந்தியாவில் இயற்கையாக ஓடுகின்ற நதிகளை இணைப்பதன் மூலமாக நாட்டின் ஒரு பகுதியை வெள்ளத்திலிருந்து காப்பாற்றவும் வரண்ட பகுதியை வளம் ஆக்கவும் திட்டம் பற்றி இந்நாட்டில் நீண்ட காலமாக பேசப்பட்டு வருகிறது

கங்கையையும், கோதாவரியையும், காவேரியையும் இணைத்தால் இந்தியாவின் எதிர்காலம் ஏற்றமுள்ளதாக இருக்கும்.

ஆனால் ஏட்டில் உள்ள திட்டமாகவே அது இன்றும் இருந்து வருகிறது.

சோவியத் ஒன்றியம் செயற்கை நதி ஒன்றை உருவாக்கி மூன்று பெரும் நதிகளை இணைக்கின்ற முயற்சிக்கு வித்திட்டுள்ளது. இதன் மூலமாக மத்திய ஆசியாவில் பெரும்பாலான நதிகளுக்கு பாசன வசதி கிடைக்கும், வளர்ந்துவரும் நகரங்களுக்கு மட்டுமின்றி தொழிற்சாலைகளின் தேவைகளையும் இது நிறைவேற்றும். மத்திய ஆசியாவிலும், கஸ்கஸ்தானிலும் வீசுகின்ற வெப்பக்காற்று குறையும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இந்த செயற்கை நதி மூவாயிரம் கிலோ மீட்டர் அகலமுள்ளதாக இருக்கும். பன்னிரண்டு முதல் பதினைந்து மீட்டர் வரை ஆறு ஆழம் கொண்டதாயிருக்கும்.

சோவியத் ஒன்றியத்தில் உள்ள மாபெரும் சைபீரியா நதியையும் மத்திய ஆசிய நதிகளான சிர் தார்யா, அமுர் தார்யா ஆகியவற்றை இணைக்கவே இந்தசெயற்கை நதியை வெட்ட இருக்கிறார்கள்.

1981 ஆம் ஆண்டில் இந்த நதி அமைப்பு பூர்வாங்க வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

புருஷன்

தென்னரசு

(5)

செண்பகஞ் சேர்வை சிகிச்சை முடிந்து வீடு திரும்பிவிட்டான்: ஆனுல், திண்ணுயிரம்? அன்று போனவன்தான்! மறுபடி தலைகாட்டவே இல்லை. அந்த இரண்டு நாட்களும் எதற்காக வந்தான்?

திண்ணுயிரத்தை நினைக்கும் போதெல்லாம் குருவம்மாவுக்குத் தலைசுற்றியது. "அந்தப் பாவி வந்துட்டுப் போனது அப்பாவுக்குத் தெரிஞ்சா அவர் மனம் என்ன பாடுபடும்?'' குருவம்மாவின் நெஞ்சம் அடிக்கடி குறுகுறுத்தது

'ஏன் குருவம்மா, ஏது இந்தப் பொடவை?'

"அதுவாப்பா...அது முந்தியே எடுத்ததுதானே! பொட்டிக்குள்ளேயே இருந்துச்சு...... அதனுலே உங்களுக்குத் தெரியல்லே!' குருவம்மா எப்படியோ பதில் சொல்லிவிட்டு புலிவாயிலிருந்து தப்பித்தவளைப்போல்' பெருமூச்சுவிட்டாள்.

இப்போது வாசலில் தபால்காரன் வந்து நின்ருன்.

குருவம்மா இருக்காங்களா? "; என்ன சீவனும்சப் பணம் வந்திருக்காக்கும்...... குருவம்மா போய் கையெழுத்துப் போட்டு வாங்கிட்டு வாம்மா'' — செண்பகத்தின் முகத்தில் எந்த அறிகுறியும் தெரியவில்லை.

ஆனுல், குருவம்மா—

"ஏம்பா, எதுக்கு இந்தப் பணம்? இதை வாங்கினுத்தான் நான் ஒழுங்கா இருப்பேனுக்கும்! அவருதான் எம் புருஷன்னு மனசிலே எழுதியாச்சு; யாரேலேயும் அதை அழிக்க முடியாது. பின்னே எதுக்காக நாம் இதை வாங்கிக்கணும்?'' என்று கேட்டுவிட்டாளே!

அதற்குச் செண்பகம்—

"இந்தப் பணம் வந்துதானு நாம சாப்புட்டுக்கிட்டு இருக்கோம்? ஒரு முறைக்காகத்தான் ஒன்னே வாங்கச் சொல்றேன்; என்ன முறை? பணத்தை வேணும்னு சொல்லிட்டா ஊரிலே என்ன சொல்லுவாங்க தெரியுமா? கழுதை கட்டவுத்துக்கிட்டு ஒடப்பாக்குது போலேயிருக்கு, அதான் சீவனும்சப் பணத்தை வாங்கமாட்டேங்குதுங்க......அப்படீன்னு தூத்துவாங்க'' என்று பதில் சொன்னுன்.

செண்பகத்தின் பதிலில் ஏதோ கொஞ்சம் நியாயம் இருப்பதாக குருவம்மா உணர்ந்தாள். ஐம்பதுரூபாயை வாங்கி வந்து எப்போதும் போல் செண்பகத்திடம் கொடுத்துவிட்டாள். இரண்டு மாதங்களுக்குப் பின் செட்டிநாட்டிலிருந்து ஒரு கோபுர வேலைக்காகச் செண்பகத்தை அழைத்திருந்தார்கள். இருபது நாட்கள் அவன் அங்கு தங்கியிருந்துவிட்டு வந்தான். வரும்போது குருவம்மாவுக்கு புதுப் புடவை, கோயில் திருநீறு துளசி எல்லாம் கொண்டு வந்தான்.

"குருவம்மா, குருவம்மா?'' வாசலில் நின்று கூப்பிட்டான் செண்பகம்.

"வந்திட்டேன்!'' என்று கூவிக்கொண்டு குருவம்மா கதவைத் திறந்தாள்.

அவளைப்பார்த்ததும் செண்பகத்துக்கு ஒரே திகைப்பு. அனல் காற்றுப்பட்டதுபோல் அவர் முகத்தைச் சுளித்தார். உடனே புகையடித்த புதுச் சுவர்போல் அவர் முகம் கருத்துவிட்டது. ஏன் அப்படி மாறியது?

செண்பகம் எதையோ அவளிடம் கேட்க வாயெடுத்தான் ஆனுல், கேட்கவில்லை. எல்லாவற்றையும் எல்லோரிடத்திலும் கேட்டுவிட முடியுமா? தமிழ்நாட்டில் வாழ்க்கைக்கே இலக்கணமிருக்கிறதே! தந்தை மகளிடம் எதைப் பேசலாம் எதைப் பேசக்கூடாது; மாமனரிடத்தில் பேசும்போது மருமகள் எவ்வளவு தூரம் தள்ளி நின்று பேச வேண்டும்; மருமகன் வரும்போது மாமியார் எதிரே இருக்கலாமா? ...... இப்படிப்பட்ட விதிமுறைகளில் ஊறிப்போன தமிழ்க் குடும்பத்தின் தலைவன் செண்பகம்சேர்வை அவன் சொந்த மகளிடத்தில் "—என்னம்மா உன் முகம் சோகை பற்றி கர்ப்பக் குறி காட்டுகிறதே!'' என்றுகேட்டுவிட முடியுமா? ஆம்; குருவம்மாவின் தோற்றம் மாறித்தான் போயிருந்தது அவளது முகம் வெளுத்து கண்கள் கிளியின் கண்களைப்போல சிறுத்து, மேனியெல்லாம் மஞ்சள் பூத்து, நீர்க்கோத்துக் காணப்பட்டது.

சேர்வையின் மனம் படபடத்தது கெட்ட கனவு கண்ட ஊமையைப்போல், களத்திலே கரத்தை இழந்தவனைப் போல் செண்பகம் தவித்தான்

"என் மகள் குருவம்மா தங்கமகள் பொன்னுெளிபாள் என்று பேர் வாங்கிய வளாயிற்றே! அவளா இப்படி இருக்கிருள்? சே! நான் முட்டாள், ஏதோ அவளுக்கு உடம்புக் கோளாறு அவ்வளவுதான்!'' என்று மனச்சாந்தி செய்துகொண்ட செண்பகம்.

"குருவம்மா,'' என்று அழைத்தான்.

"என்னப்பா!'' தள்ளி நின்றே பேசினுள் குருவம்மா.

"ஏம்மா, உடம்புக்கு என்ன? முகமெல்லாம் வெளுத்திருக்குதே! ஆஸ்பத்திரியிலே காட்டவேணுமா?''

"எனக்கு ஒண்ணுமில்லேயப்பா! சின்னப் பிள்ளையிலேயிருந்து பாக்குத் தின்னு இப்பதான் தொல்லைப்படுத்துது!'' என்ருள் குருவம்மா. ஆனுல், அவள் மனதுக்குள் அப்பாவின் அக்கினிக் கோபத்துக்கு இலக்காகும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறதே என்று நினைக்காமல் இல்லை

செண்பகத்தின் மேற்பார்வையில் அழகரடியில் ஒரு கட்டிட வேலை நடந்துகொண்டிருந்தது. காலையில் போனுல் மாலையில்தான் திரும்புவான் சேர்வை.

செண்பகம் அன்று காலையில் வீட்டைவிட்டு புறப்பட்டு அம்மன் சன்னதி அருகே வந்துகொண்டிருக்கும்போது பக்கத்தில் ஒரு துணிக்கடையிலிருந்து யாரோ 'ஐபா' என்று கூப்பிடுவதுபோல் இருந்தது சேர்வை திரும்பினுன். வாடிக்கையாக வீட்டுக்குத் தயிர் ஊற்றும் தயிர்க்காரி அவனருகே வந்தாள்.

"என்னம்மா இங்கே நிக்கிறே?''

"துணி எடுக்க வந்தேன்... அய்யாகிட்டே கொஞ்சம்பேசலாம்னு நெனைச்சேன். மீனுட்சியம்மனுப் பார்த்து ஒங்களை இங்கே கொண்டாந்திருச்சு ..கோவிச்சுக்கப்படாது நீங்க குருவம்மா முகக்குறி ஒருமாதிரியா இருக்கு......எனக்கு ரெண்டு மாசமா ஒரு சந்தேகமுங்க ... நீங்க ஆஸ்பத்திரியிலே இருந்தப்போ வீட்டிலே பூவாடையும் பத்திவாடையும் கமகமத்துச்சு......நான் ஒரு நாளு அதிகாலையிலே போய்ட்டேன்......வீட்டிலே ஒரு பழக்கூடை இருந்துச்சு. பாயிலே மல்லிப்பூ கொட்டிக்கெடந்ததைப் பார்த்தேன்......காலாகாலத்திலே ஆக வேண்டியதைப் பாருங்க......எனக்கென்னமோ புடிக்கல்லே.. நீங்க எனக்கு அப்பாமாதிரி. அதாலேதான் சொன்னேன்''

ஏற்கனவே செண்பத்தின் மனத்தில் படிந்திருந்த ரேகைக்கு உருவம் கொடுத்துவிட்டாள் தயிர்க்காரி

செண்பகத்தின் உடல் கலகலத்துவிட்டது ரத்தமெல்லாம் உருகி நீராக ஓடிவிட்டதுபோல் அவனுக்கொரு நினைப்பு.

"நீதான் இப்ப எனக்கு காவல் தெய்வம்!......இதுக்கு மேலே என்ன சொல்றதுன்னே எனக்குப் புலப்படல்லே'' செண்பகம் சோர்ந்துவிட்டான் பாதிக்கப்படும்போது அல்லது பலவீனமடையும்போது மனிதன் கொள்ளைக்கூட்டத்தினரிடம் சிக்கிக்கொண்டவனைப்போல பயந்து கெஞ்ச ஆரம்பித்துவிடுகிருன்.

"நீங்க சொல்றது எனக்குப் புரியுதய்யா. என் தலை போனுலும் நான் வெளியே சொல்லமாட்டேன்' என்ருல் தயிர்க்காரி.

உடைந்த உள்ளத்துடன் செண்பகம் வீடு திரும்பினுன். ஆனுல், அவன் வீட்டை நெருங்கியபோது அவனுக்கொரு குழப்பம்!

"வீட்டுக்குள் போய் என்ன செய்வது? குருவம்மாவை என்ன கேட்பது எப்படிக் கேட்பது? ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. இரவுவரை எப்போதும்போல் சந்தோஷமாகப் பேசிக்கொண்டே இருந்துவிட்டு இரவுச் சாப்பாட்டில் நஞ்சைப் போட்டுக் கொன்றுவிட்டால் என்ன? அதுதான் சரியான யோசனை —என்று நினைத்த செண்பகம் மறுபடியும் கடைக்கு வந்து ஒரு டப்பா மூட்டைப்பூச்சி மருந்தை வாங்கிக்கொண்டு போனுன்

"குருவம்மா?'

"குருவம்மா?'

அவள் இருந்தால்தானே பதில் பேசுவதற்கு?

வீடு வெறிச்சோடிப்போய் இருந்தது. செண்பகமும் அவனது மனைவி சக்குவும் இளம் பிராயத்தில் சேர்ந்திருந்து எடுத்த புகைப்படம் ஒன்று வெதுகாலமாக வீட்டிலுள்ள அறையில் மாட்டிக்கிடந்தது. அந்த அறையைக் கோயில் வீடு என்றுதான் வீட்டில் எல்லோரும் சொல்லுவார்கள். அந்த அறைக்குள் கிடந்த பெற்ருேர்களின் படத்தில் ஒரு பூமாலை தொங்கியது.

செண்பகம் சிலைபோல் நின்ருன். கொலை நடந்த வீட்டில் துப்பறியும் அதிகாரி நோட்டம் விடுவதுபோல் செண்பகம் மேலும் கீழுமாகப் பார்த்தபடி நடந்தான்.

ஃ ஃ ஃ

இது மங்கம்மா சத்திரம்! பெயர்தான் சத்திரமே தவிர. அதில் யாரும் இலவசமாகத் தங்கிவிட முடியாது. ரயிலைவிட்டிறங்கும் புதுமுகங்களுக்கு எதிர்ப்பில் தோற்றமளிப்பது மங்கம்மா சத்திரம் தான். இப்போது அது நவீன வாய்ப்புகள் கொண்ட ஒரு லாட்ஜாகிவிட்டது

இராமனுதபுர மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூரில் விடிய விடிய நாடகமாடிவிட்டு மதுரவல்லி அப்போது தான் காரில் வந்திறங்கினுள். சத்திரத்தில் அவளுக்கென ஒரு அறை காலி செய்யப்பட்டிருந்தது.

மதுரவல்லியோடு திண்ணுயிரமும் வந்தான். இருவருமாக அந்தத் தனி அறைக்குப் போனுர்கள்.

சத்திரத்து மானேஜர் கூட்டுக்காரியை அழைத்து திண்ணுயிரத்தின் அறையைச் சுத்தப்படுத்தி படுக்கைகளை உதறிச் சரியாக விரிக்கச் சொன்னுர்

வேலைக்காரி கூட்டு மாறுடன் அந்த அறைக்குள் நுழைந்தாள். உள்ளே, முதல் நாள் நாடகத்திற்காக இறுக்கப் பின்னிக் கட்டியிருந்த மதுரவல்லியின் பொய்ச் சடையை திண்ணுயிரம் அவிழ்த்துக்கொண்டிருந்தான். மதுரவல்லி அவன் மடியில் சாய்ந்தபடி கண்ணுறங்கினுள்.

"சை! நீர் ஒரு மனுஷன் தானு? கொண்டவளைக் கூட்டுக்காரியாக்கிட்டுக் கண்டவளோடு ஓடி அவளுக்குச் சேவகம் புரியலாமா? இது ஆம்பளை செய்கிற வேலையா என்று கேட்டுவிட்டுத் துணிவில்லை அவளுக்கு.

"ஆ? நீயா?''

கூட்டுக்காரியைக் கண்டதும் திண்ணுயிரம் பேயடித்தவன்போல் திக்குமுக்காடினுன். அவனுக்குப் பேச நா எழவில்லை. மதுரவல்லி விழித்துக்கொண்டான்.

'ஏண்டி கூலிக்காரக் கழுதை! புருஷன் மனைவி தனியா இருக்கிற அறைக்கு வரலாமா? மதுரவல்லி எரிந்து விழுந்தாள்.

'மதுரவல்லி' திண்ணுயிரம கதறினுள்.

'ஏன் கத்துறீங்க? இவ யாரு? உங்களுக்குத் தெரியுமா?''

'சீ இவ யாரோ; நீ தூங்கு உடம்பு கெட்டுப் போகப் போவுது!''

வாக்குவாதம் முற்றிவிட்டது. சத்திரத்து மானேஜர் ஓடிவந்தார்,

ஏம்மா ஒன்னை வேலைக்குச் சேக்கும்போதே சொன்னேனே. இப்படியெல்லாம் வருமின்னு எனக்கும் தெரியும......சரி நீ உள்ளே போ'' என்ருர் மானேஜர்,

ஓ...ஹோ அப்படியா சங்கதி மதுரவல்லிபுறப்படு! இந்த இடம் நமக்கு ஒத்து வராது! இந்தாங்க வாடகை!'' என்று பணத்தைக் கொடுத்துவிட்டு இருவரும் வெளியேறினுர்கள். அவர்கள் போனபிறகு.

குருவம்மா! என்று கூப்பிட்டார் மானேஜர்.

"என்னங்கய்யா!'' என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வந்து நின்ருள் குருவம்மா!

ஏன் அந்த அறையில் அப்படி நடந்துகொண்டாய்?

'அவருதான் என் புருஷனுங்க; என்னை இப்படி துடியாத் துடிக்கவச்சுப்புட்டு கும்மாளம் போடுருரு!'' என்ருள்.

மானேஜர் எதிர்பார்க்கவே இல்லை கதை இப்படித் திரும்புமென்று. அன்றிலிருந்து குருவம்மா மீது மானேஜருக்கு ஒரு இரக்கம் பிறந்து விட்டது. அவருக்கு வரும் வீட்டுச் சாப்பாட்டில் ஒரு பகுதியைக் குருவம்மாவுக்குக் கொடுத்தார்.

ஃ ஃ ஃ

சிலநாட்கள் கழித்து மங்கம்மா சத்திரத்தின் முகவரியிட்டு குருவம்மாளுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதமல்ல அது; திண்ணுயிரத்தின் வக்கீல் விடுத்த முன்னறிவிப்பு. அதில்,

"எனது கட்சிக்காரராகிய திண்ணுயிரத்திடம் மாதம் ஐம்பது ரூபாய் ஜீவனுசப் பணம் பெற்றுக்கொண்டு வரும் நீ, எனது கட்சிக்காரர் மனம் புண்படும்படி நெறி தவறி நடந்து கருவுற்றிருக்கிருய். ஆகையால் எனது கட்சிக்காரர் ஏன் உன்னை விவாகரத்து செய்துகொள்ளக் கூடாது என்பதற்கான பதிலை இன்னும் பத்துநாட்களுக்குள் தெரிவிக்க வேண்டியது,''— என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

குருவம்மாவுக்குத் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர, வேறுவழி தோன்றவில்லை. திண்ணுயிரம் வீடுதேடி வந்தது, தன்னை மன்னித்துக்கொள்ள மன்ருடியது எல்லாம் திட்டமிடப்பட்ட சதி என்று அவள் அறிந்தாள்.

(தொடரும்)

ரமீசாபீ — நாகம்மாள் — பன்னுதேவி

கற்பைச் சூறையாடும் - காவல் நிலையங்கள்!

உலகத்திலேயே பெண்மையை வழிபாடு செய்யும் ஒரே நாடு—இந்தியா; பெண்மையைப் போற்றிப் புகழும் ஒரே நாடு—இந்தியா; பாரதியாரிலிருந்து தாகூர்வரை பெண் குலத்தின் மாண்பைப் பாடி மகிழ்ந்த கவிஞர்கள் ஏராளம்; பெண்மையை உயர்த்திப் பேசி சரச்சந்திரரைப் போல் எந்த நாவலாசிரியரும் உலகத்தில் இலக்கியம் படைத்ததில்லை; தமிழ்த் தென்றல் திரு வி. கவும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் மகளிர்க்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சாடி சங்கநாதம் எழுப்பியதுபோல் உலகில் வேறு யாரும் குரல் எழுப்பியது இல்லை. ஆனால் — இந்தியக் காவல் நிலையங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் இருக்கிறதே.. அதைப்போல உலகத்தில் வேறு எந்தக் காவல் நிலையங்களிலும் பெண்மைக்கு அவமானம் இழைக்கப்படுமா?

ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அல்லது சாதாரண ஒரு போலீஸ்காரர் தனது கையிலுள்ள லத்திக் கம்பை செங்கோலாகவும், தலையில் அணிந்திருக்கும் தொப்பியைக் கிரீடமாகவும் ஏறிவரும் சைக்கிளை இரதமாகவும்கருதிக்கொண்டுதான் இன்றளவும் நகர் 'உலா' வருகிறார்கள்

அன்றாட வயிற்றுப் பாட்டைத் தீர்ப்பதற்காகச் சாலை ஓரங்களில் காய், பழம்—போன்ற பொருட்களைக்கூடையில் வைத்து வியாபாரம் செய்யும் ஏழை எளிய ஆண்களையும், பெண்களையும் நம்முடைய காவலர்கள் நடத்துகின்ற விதம் இருக்கிறதே –

சைக்கிளில் வந்தபடியே அந்தக் கூடைகளைக் காவலர்கள் தங்களுடைய பூட்ஸ் கால்களால் உதைத்துவிட்டுச் செல்லும் காட்சியை 'சுதந்திர' இந்தியாவில் அன்றாடம் காணலாம்!

திருட்டுப் போய்விட்டதாகப் புகார் செய்யப் போகின்றவராயிருந்தாலும் சரி, திருடிவிட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு 'விசாரணை' செய்ய இழுத்துக்கொண்டு போகப்படுபவராயிருந்தாலும் சரி, 'உருப்படி'யாகக் காவல் நிலையத்திலிருந்து மீளமுடியாது என்பது ஊர் அறிந்த உண்மை!

— இவைகளையெல்லாம் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன காரணத்தால் 'போலீஸ் வர்க்கத்தைத் திருத்த முடியாது' என்ற கடைசி முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள். ஆனால்—

காவல் நிலையத்திற்கு இட்டுச் செல்லப்படும் பெண்களுக்கு இழைக்கப்படும் மிருகத்தனமான துன்புறுத்தல்களைப் பற்றிக் கேள்விப்படும்போது—'போலீஸ் வர்க்கத்தின் நடைமுறைகளை மாற்ற மக்கள் ஒன்றுகூடி ஏதேனும் செய்தாக வேண்டிய கட்டாயம் எழுகிறது!

தென்னாற்காடு மாவட்டத்திலிருக்கும் இலஞ்சி கிராமத்தைச் சேர்ந்த நாகம்மாள் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்ணின் வயது நாற்பது. நெருக்கடி காலத்தின்போது கைது செய்யப்பட்ட அப்பெண்ணைக் காவலர்கள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தினார்கள் என்று கேள்விப்படும்போது இரத்தமே உறைந்துவிடும்போல் இருக்கிறது:

—"என்னை, ஆடைகளைக் கழற்றி அந்தரத்தில் தொங்கவிடவேண்டும் என்று சப்-இன்ஸ்பெக்டர் மைக்கேல் பிரகாஷ் கூறினார், அதன்பேரில் இரண்டுபுறத்திலும் சரடுகளால் சுற்றி, சங்கிலிக் கொக்கிகளில் மாட்டி என்னைத் தொங்கவிட்டார்கள். அடியிலே சோளத்தட்டைகளைக் கொளுத்தி நெருப்பு வைத்தார்கள்; அலறித் துடித்தேன்-அடியில் எரியும் நெருப்பின் சூடு தாங்காமல் தொங்கிக்கொண்டே புரண்டதில் என் கை எலும்பு முறிந்துவிட்டது...மெழுகுவர்த்தியைக் கொளுத்தி குழந்தைக்குப் பால் கொடுக்கும் இடத்தில் சுட்டுக் கருக்கினார்கள்...என்னுடைய பின்புறத்தில் லத்தியைத் திணித்ததால் மலத்துவாரத்தில் இரத்தம் கொட்டியது"

— நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கொடுமைகளுக்கு ஆளான நாகம்மாளுக்குப் 'பைத்தியம்' என்ற பட்டம் சூட்ட நடந்த முயற்சியை மருத்துவர் முறியடித்தார். ஒரு மணிநேரத்திற்கு மேலாக அப்பெண்ணை பரிசோதித்த மனநோய் சிகிச்சையில் நிபுணரான மருத்துவர் 'நாகம்மாள் பைத்தியம் இல்லை' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். தாளமுடியாத சித்திரவதைகளின் காரணமாக அவர் உணர்ச்சி வசப்படுகிறார் என்று கூறி, கொடுமைகள் இழைக்கப்பட்டது உண்மைதான் என்றார்.

நாகம்மாளைக் கொடுமைப்படுத்தியதோடு காவலர்களின் 'வெறி' தணியவில்லை,

நாகம்மாளின் மீது சுமத்தப்பட்ட திருட்டுக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி அவளுடைய பதினாறு வயதான மகள் பூங்காவனத்தை வற்புறுத்தியபோது—'என் தாய் திருடி அல்ல'—என்று கூறியதற்காக—

பூங்காவனத்தின் பிட்டத்தில் லத்தியாலும், தடியாலும்; கைகளாலும் மாறி மாறித் தாக்கியிருக்கிறார்கள் காவலர்கள். மார்பகங்களைப் பற்றி இழுத்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல—

காவலர்கள் மாறி மாறி அப்பெண்ணை தினந்தோறும் கற்பழித்திருக்கிறார்கள் — ஏறத்தாழ ஒன்றரை மாத காலத்திற்கு

உண்மையில் —

பைத்தியம் நாகம்மாளுக்குப் பிடித்திருக்க முடியாது.. அவளைச் சித்திரவதை செய்த காவலர்களுக்குத்தான் ஒருவேளை பைத்தியம் பிடித்திருந்ததோ என்னவோ! —

இந்தியாவின் இருண்ட நாட்களின் போதுதான் காவலர்கள், மிருகங்களாக மாறி உயிர்வேட்டையாடினார்கள் என்று சொல்வதற்கில்லை.

அண்மையில் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜான்பூர் மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சி — அன்றிலிருந்து இன்றுவரை — காவலர்களுக்கு இருக்கும் வக்கிரப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

—: பழனி சித்தார்த்தன் :—

கடந்த மே திங்கள் பதின்மூன்றும் தேதி ஜான்பூர் மாவட்டத்திலிருக்கும் காவல் நிலையத்தில் அப்துல்ஹசன் என்பவர் மாண்டு போனார். அவர் மரணம் குறித்து — ஒரு நீதி விசாரணை நடந்த பிறகு — வெளிவந்த உண்மைகள் நம்மைத் திடுக்கிடச் செய்கின்றன

லப்ததி என்ற கிராமத்தில் முரளி என்பவர் மே திங்கள் ஆறும் தேதி கொலை செய்யப்பட்டார்.

அப்துல் ஹாசனும், பன்னுதேவி என்ற பெண்ணும்தான் அந்தக் கொலையைச் செய்திருப்பார்கள் என கிராமத்தைச் சேர்ந்த சிலர் சந்தேகித்தார்கள்.

பதல்பூரிலிருந்து வந்த காவலர்கள் உடனே 'விசாரணை'யைத் தொடங்கினார்கள்.

எப்படித் தெரியுமா ?

அவர்கள் வந்த உடனேயே பன்னுதேவியை நிர்வாணமாக்கினார்கள், இரண்டு காவலர்கள் அவளுடைய தலைமயிரைப் பற்றி இழுத்து அபுல் ஹாசனின் மடியில் தள்ளிவிட்டார்கள்; ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அபுல் ஹசனைப் பார்த்துக் கட்டளையிட்டான்:

அப்போதே—அந்த இடத்திலேயே—பன்னுதேவியோடு உடலுறவு கொள்ளவேண்டுமென்று.

இருவரும் மறுக்கவே காவலர்கள் அபுல் ஹாசனை ஈவிரக்கமில்லாமல் அடிக்கத் தொடங்கினார்கள், இன்னொரு சப்-இன்ஸ்பெக்டர், பன்னுதேவியின் பிறப்புறுப்பில் மூங்கில் கழியை.. பிறகு இருவரும் காவல் நிலையத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டார்கள்,

காவல் நிலையத்தில்—ஜான்பூர் மாவட்ட சூப்பிரண்டண்ட் ஆப் போலீஸ் (S.P.) அபுல்ஹாசனைப் பார்த்து பன்னுதேவியைக் கற்பழிக்கும்படி ஆணையிட்டார்.

ஹசன் மறுக்கவே மீண்டும் அடிகள்—உதைகள்—குத்துகள்—

பெண்ணென்றும் பாராது பன்னுதேவி மீதும் தாக்குதல்கள்—

இரவு முழுக்க வேதனையால் துடிதுடித்த ஹசன் ஒரு வாய் தண்ணீர் கேட்டபோது கெஞ்சினார்—தண்ணீர் அவருக்குத் தரப்படவில்லை

எண்பத்தைந்து வயதான அவருடைய தந்தையும், எண்பது வயதான தாயும் மகனைப் பார்க்க வந்தார்கள். ஆனால் காவலர்கள் அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை.

மறுநாள் காலை (மே 13) ஹசனும் பன்னுதேவியும் கூட்டம் நிறைந்த ஒரு பஸ்ஸில் மாவட்டத் தலைமைச் செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆனால்—

ஹாசன் வழியிலேயே மாண்டுவிட்டார்.

பிண பரிசோதனை- (Post Mortem)க்குப் பிறகு ஹாசனின் உடம்பில் முப்பது காயங்களும், எலும்புகள் முறிக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனால்—

அரசு, காவலர்கள் மீது இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

அநியாயமாக ஒரு மனிதனை அடித்துக் கொன்ற—எக்குற்றமும் செய்யாத ஒரு பெண்ணைக் கற்பழித்த—காவலர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்காததால் உத்தரப்பிரதேசத்து மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

ஆந்திராவைப் போல் அங்கும் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அரசு வேடிக்கை பார்க்கப் போகிறதா என்ன ?

ஐதராபாத்தில் ஒரு பெண் காவல் நிலையத்தில் கற்பழிக்கப்பட்டதற்காக ஆந்திர மாநிலமே சில நாட்கள் 'ஸ்தம்பித்துப்' போனதே— ரமீசாபீ என்ற முஸ்லீம் பெண்ணை 'விசாரிப்பதற்கு' என்று காவல் நிலையத்திற்குக் கூட்டிச்சென்று ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், இரண்டு காவலர்களும் மாறி மாறிக் கற்பழித்தார்கள்—அப்பெண்ணை 'ஒரு விபச்சாரி' என்றும் கூசாது கூறினார்கள்.

விபச்சாரியாக இருந்தால் கூட அவளை என்னவேண்டுமானாலும் செய்யலாம் என ஏதாவது சட்டம் இருக்கிறதா ?

அதுமட்டுமல்ல—

ரமீசாவின் கணவரான அகமது ஹாசனையும் காவலர்கள் அடித்தே கொன்றுவிட்டார்கள் — 'விசாரிக்கிறோம்' என்று சொல்லி

—"பதினைந்து வயதுக்குட்பட்ட ஆண்களையோ, அல்லது எந்தப் பெண்ணையுமோ எந்தப் போலீஸ் அதிகாரியும், அவர்களை விசாரிப்பதற்காகக் காவல் நிலையத்திற்கோ, வேறு இடத்திற்கோ அவர்களை வரும்படிக் கட்டளையிடக் கூடாது அவர்கள் எங்கே குடியிருக்கிறார்களோ அங்கேதான் அவர்களை விசாரிக்க வேண்டும்"

இது சட்டத்தின் ஒரு பிரிவு

ஆனால்—

'சட்டங்கள் மீறப்படுவதற்கே' என்ற கூற்றை மெய்யாக்கும்விதத்தில்—இச்சட்டமும் கடைபிடிக்கப்படுவதில்லை!

வேலிகளே பயிர்களை மேயும் இந்நிலையை மாற்ற அரசாங்கம் செய்யப்போவது என்ன ?

குற்றமிழைக்கப்பட்டதாக மெய்ப்பிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த தண்டனையை உடனடியாக வழங்கி — அடுத்தவர் அதே குற்றங்களைத் தொடர்ந்து செய்யாது கண்காணிக்க வேண்டாமா ?

குற்றமிழைத்தவர்கள் என மெய்ப்பிக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது — தகுந்த நடவடிக்கை எடுக்க ஆட்சியில் இருப்பவர்கள் முன்வரவில்லை என்றால் அதற்குக் காரணம் 'அரசியல் காழ்ப்புணர்ச்சி' தவிர வேறு எதுவாக இருக்கமுடியும் ?

ஆளுங்கட்சியினரின் அலட்சியமான—ஒரு தலைப்பட்சமான—போக்கு நீடித்தால் தொடர்ந்து சட்டங்களும் மீறப்பட்டுக் கொண்டுதான் இருக்கும்!

விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு நமது 'நம் நாடு' இதழ்களை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

பத்ராவதி
பொள்ளாச்சி
கொட்டாம்பட்டி
தூத்துக்குடி
விருதுநகர்
பசுபதி கோவில்
குளித்தலை
திண்டுக்கல்
பாளையங்கோட்டை

நிர்வாகி,
நம் நாடு.
அன்பகம், சென்னை-600018

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஒருநாள் மாலை கோயில் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் எல்லாம் தங்களுடைய அன்றைய வேலையை முடித்து விட்டு, உணவருந்தவும்—ஓய்வு பெறவும் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாமல்லபுரத்திலிருந்து வந்துள்ள சிற்பி இனியன் மட்டும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருந்த பெரிய நந்திச் சிலையின் அருகே அமர்ந்து ஆகாயத்தை நோக்கிச் சிந்தனையை ஓட விட்டுக்கொண்டிருந்தான்!

"வந்து நாட்கள் பலவாகியும் தனக்குரிய சிற்ப வேலையைத் தொடங்குவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லையே என்ற கவலை அவன் முகத்தில் படர்ந்திருந்தது" என்று யாரும் யூகித்துவிடலாம்.

தன்னை அழைத்திருக்கின்ற அரசனோ, சோழப் பேரரசின் இணையற்ற சக்கரவர்த்தி இராசராசன்; அவன் பெயர் கேட்டுப் பகைவர் நாடுகள் ஊமையாய் — ஆமையாய் அடங்கிக் கிடக்கின்றன — அப்பேர்ப்பட்ட மாவீரன் அழைத்திருக்கிறான், அவன் இட்டிருக்கின்ற பணியோ மிகப் பெருமை வாய்ந்தது! அதனைச் செய்து முடித்து விட்டால், இராசராசனின் பெயரோடு சிற்பி இனியனின் பெயரும் சேர்ந்து ஒலிக்கும்—கலை உலகத்தில்; ஆனால், அந்தப் பேறு விரைவில் கிட்டாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறது—அதை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த இனியனின் காதில், 'தம்பி' என்று யாரோ அழைக்கும் ஒலி கேட்டது; திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்; கிழவி அழகி அவனருகே வந்தாள்; அவளைப் பார்த்த இனியனின் கண்கள், அவளுக்குப் பின்னால் நின்ற அழகிய பெண்மீது பாய்ந்தன!

தங்கமேனி—
தாமரை முகம்—
நீலக் குறுநயனம்—
கோலச் செவ்வாய்—
வில்லால் புருவம்—
விம்மிய மார்பகம்—
ஆலிலை வயிறு—
நூலிழை இடை—

இத்தனை அழகையும், இனியன் ஒரே பார்வையில் மொண்டு விட்டான்; அது சிற்பியின் கலைக் கண்ணோட்டமே தவிர, சித்தம் பேதலித்தவனின் காம வெறியாட்டமல்ல.

"பாட்டீ—என்ன வேண்டும்? யார் இந்தப் பெண்?"

"தம்பி—இவள் என் மகள்; உறையூரிலிருந்து நேற்றுத்தான் வந்தாள்; உன்னைப் பார்க்கத்தான் அழைத்து வந்தேன்."

இனியன் அவளை மீண்டும் கவனமாகப் பார்த்தான்; அழகே உருவாக நிற்கும் அவளுக்கு அந்தச் சாதாரண ஆடைகள் மேலும் பொலிவை அள்ளிப் பொழிந்ததை அவனால் ரசிக்க முடிந்தது!

"உன்பேர் என்னம்மா?"

சிற்பியின் கம்பீரமும், கனிவும் குழைந்த கேள்விக்கு அவள் அளித்த பதிலில் இனிமை தவழ்ந்தது!

"என் பேர் சாமுண்டி!"

இனியனிடம் தான் வந்த காரியத்தைக் கிழவி எடுத்துரைக்க விரும்பினாள்;

"தம்பி! இந்த இராசராசேச்சரத்தை வெற்றிகரமாகக் கட்டி முடிக்க என்னால் இயன்ற உதவிகளையெல்லாம் செய்வதென்று முடிவு கட்டிக்கொண்டிருக்கிறேன்; அது ஒன்றுதான் என் வாழ்வின் கடைசி இலட்சியமாகும்; அரசர் பெருமான் விரும்பியவாறு நடனச் சிற்பங்கள் இன்னும் செதுக்கப்படாததால்—ஆலயத் திருப்பணி முடிவடைந்தும்—மனநிறைவு ஏற்படவில்லையென்று கேள்விப்பட்டேன்; நீ செதுக்க வேண்டிய சிற்பங்களுக்குத் தேவையான நாட்டிய மாடப் பெண்கள் கிடைக்காமல் வேலை தயங்கிக் கிடக்கிறதாமே; அதற்காகத்தான் என் மகள் சாமுண்டியை அழைத்து வந்திருக்கிறேன், நாட்டியக் கலையை முறையாகப் பயின்றவள்; உன் சிற்பங்களுக்கு ஏற்றவாறு ஆடிக் காட்டுவாள், இவள் உதவியைப் பெற்று—அரசர் பெருமானின் ஆசையை விரைவில் நிறைவேற்ற முடியுமா என்று சொல்லு!"

இனியன் ஆச்சரியத்துடன், கிழவியையும்—சாமுண்டியையும் மாறி மாறிப் பார்த்தான்!

'நான் முதலிலேயே நினைத்தேன்—உடலமைப்பும், நடனத்திற்கென்றே அமைந்ததுபோல் இருக்கிறதே' என்று; எங்கே சாமுண்டி—நான் கேட்கும் சில தாண்டவ நிலைகளின் பாவத்தைப் பிடித்துக்காட்டு பார்ப்போம்' — என்று குளிர் மொழிகளை வாரி இறைத்தான் இனியன்!

ஆடற்கலையில் மிக்க வல்லவர்களாகவும்—அதற்கெனக் கலைக் கூடங்களில் பயின்றவர்களாகவும் உள்ள நூற்றுக் கணக்கான பெண்கள் தோல்வியுற்றுத் திரும்பிய ஒரு போட்டிக்குச் சாதாரண ஒரு பெண்—ஆடுங்கலை தெரியாத குடும்பத்தில் பிறந்தவள்—ஆடு வளர்க்கும் கலை மட்டுமே பயின்ற அழகியின் திருமகள்—தைரியமாக வந்து நிற்பது கண்டு அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது; தன் சிற்பப் பணி முடிவடைந்துவிடும் என்ற ஆறுதலும் தோன்றிற்று. அந்த மகிழ்ச்சியையும் ஆறுதலையும் வெற்றி கொள்ளும் வகையில் ஐயப்பாடும் எழுந்தது; அவள் திறமையுள்ளவள்தானா—தனக்கு உதவியாக இருப்பாளா—தன் கலைத் தொண்டினை வெற்றி பெறச் செய்வாளா?—இந்த வினாக் குறிகளின் களமாயிற்று, இனியனின் நெஞ்சம்!

சாமுண்டி பூமியைத் தொட்டு வணங்கி, 'ஆசான் வணக்கம்' தெரிவித்துவிட்டு—அந்தச் சிற்பியின் முன்னால் வந்து நின்று கொண்டு—அவன் வாயசைவுக்குக் காத்திருந்தாள்.

சிற்பி இனியன், அவளைச் சோதித்துத் தேர்ந்தெடுக்கும் முறை எப்படி என்பதைக் கிழவியும் ஆவலுடன் எதிர் பார்த்தவாறு அங்குள்ள ஒரு படியின்மீது உட்கார்ந்து கொண்டாள்; 'மகள் சாமுண்டி வெற்றி பெறுவாள்' என்ற நம்பிக்கை அந்தக் கிழவியின் முகத்தில் ஜொலித்துக்கொண்டிருந்தது!

ஊர்த்துவ தாண்டவத்தின் நிலைகளைக் குறிப்பிட்டு, 'பாவ'ங்களைக் காட்டுமாறு முதலில் கூறினான்.

சாமுண்டி அவன் விரும்பிய பாவங்களையெல்லாம் துரிதமாகவும், மிகத் துல்லியமாகவும் பிடித்துக் காட்டினாள்!

அடுத்தது, ஆச்சரிய தாண்டவம்—அகலத் திறந்துகொண்ட அவள் விழிகளிலிருந்து பொழிந்த வண்ணம் இருந்த வியப்பே வியப்பு!

வெள்ளி மலர் ஒன்றின் நடுவில் கருவண்டு சுழல்வது போல் அவள் கருவிழிகள் சுழன்ற காட்சி கண்டு இனியன் அயர்ந்து போனான்!

அகோர தாண்டவத்தின் போது அந்த மலர் முகம் எப்படித்தான் நெருப்பாக மாறியதோ தெரியவில்லை!

'ஆனந்தத் தாண்டவம்' என்றான்; நெருப்பு முகம் நிலவாகச் சிரித்தது—நெளியும் கைவிரல்கள் பார்ப்பவர் நெஞ்சில் புத்துணர்ச்சியைப் பாய்ச்சியது—நெஞ்சத்து விம்மல், கலையழகின் உச்சத்தை உணர்த்தியது!

அனவரத் தாண்டவத்தின் பாவமும்—அற்புதத் தாண்டவத்தின் நேர்த்தியும்—இனியன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன; தன் முயற்சி வெற்றிபெறும் என்ற முழு நம்பிக்கையில் பூரிப்படைந்தான்!

திரிபுரம், புஜங்கம் ஆகிய தாண்டவங்களுக்குரிய பாவங்களை அவள் ஆடிக் காட்டி—இனியனின் மனமார்ந்த பாராட்டுரைகளைப் பெற்றாள்!

சங்கார தாண்டவத்தின் பாவ உணர்ச்சியை அவள் காட்டும்போது, கொடுவாள் கொண்டு நிற்கும் மகாவீரனும் நடுங்கிவிடக் கூடும்!

பிரளய தாண்டவத்திற்குரிய சில நிலைகளைக் காட்டும்போது கலை வயப்பட்ட இளைஞனும் சிற்பி இனியனின் கண்கள், நீர்த்திவலை நிறைந்து மின்னிக் கொண்டிருந்தன!

அவள் கைகள் அசைந்தன—அதில் கடல் கொந்தளித்தது; உடல் குலுங்கி ஆடிற்று—அதில் மலைகள் நடுங்கின; இடை துவண்டது—அதில் நதிகள் திசை மாறிப் போயின; விழிகளை உருட்டினாள்—அதில் எரிமலை பொங்கி எழுந்தது; கோபச் சிரிப்பு—அங்கே மின்னல்கள் கோடி கோடி!

பூமிஅதிர்ந்ததுபோல்—புயலும் தீயும் தோழமை கொண்டு தாவியதுபோல்—அவள் ஆடிக்காட்டிய பிரளய நடனத்து நிலைகளைக் கண்டு இனியன் மெய்மறந்து போனான்!

அழகிக் கிழவி ஓடிப் போய்த் தன் மகளைக் கட்டித் தழுவிக்கொண்டு, அவள் நெற்றியில் முத்தமிட்டாள்!

தன்னை மறந்து நின்று கொண்டிருந்த இனியன்—மெல்ல நினைவு வரப்பெற்றவனாய்—பேசுவதற்கு நாவை நனைத்துத் தயார்படுத்திக் கொண்டு, 'சாமுண்டி—கலையுலகின் தலைமைப் பீடத்தை அலங்கரிக்க வேண்டிய தெய்வம் நீ; அழகிப்பாட்டி செய்த பாக்கியம், கலைமகள் அவள் வயிற்றில் உதித்திருக்கிறாள் என்றுதான் கூற வேண்டும்; பாட்டி மிகுந்த புண்ணியம் செய்தவள்—அதனால்தான், அவள் அளித்த தளக்கல், இவ்வளவு புகழ் வாய்ந்த கோபுரத்து விமானத்தின் உச்சியில் ஏறிக் கொண்டது; அவள் வயிற்றில் பிறந்த உன் கலைச் செல்வமும் கோயில் மேல்தளத்தின் உட்பாகத்து அருவரிசையில் பாதுகாக்கப் படப் போகிறது; சாமுண்டீ, ஆண்டவனே வந்து இந்தத் தாண்டவங்களை ஆடிக் காட்டி இருந்தாலும், உன்னை வென்றிருக்க முடியாது என்பதே என் திடமான கருத்து' என்றெல்லாம் வர்ணிக்கத் தொடங்கிய இனியனை இடைமறித்துக் கிழவி "அப்படியானால் தம்பி—நாளை முதல் சாமுண்டியை இங்கு வரச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

"கேட்க வேண்டுமா என்னை; அவளால் கலை பிழைக்கப் போகிறது—அவளால் கலை வாழப்போகிறது—அவளால் கலை வளரப் போகிறது' என்று பேரானந்தத்தில் பிதற்றத் தொடங்கினான் அந்த வாலிபச் சிற்பி!

⁂ ⁂ ⁂

மறுநாள் சாமுண்டி இனியன் குறித்த நேரத்திற்கு வந்து சேர்ந்தாள்; சிற்ப வேலை தொடங்கிற்று; தேவையான அபிநய பாவங்களை அவன் விரும்பியபோதெல்லாம் பிடித்துக் காட்டி, முதல் சிற்பத்தை எழிலோடு வடிப்பதற்குத் துணை நின்றாள்!

"ஒரு நாளைக்கு ஒரு சிற்பச் சிலை வடித்து விடலாம்' என்ற நம்பிக்கையைச் சாமுண்டிக்குத் தெரிவித்து அவளை முதல் நாள் வழியனுப்பி வைத்தான்.

அடுத்த நாளும் அவர்கள் எண்ணியவாறு சிலை முடிந்தது!

(3)

அடுத்தடுத்து ஐம்பது நாட்கள் உருண்டு விட்டன, ஒவ்வொரு நாளும் சாமுண்டி வரும்போது 'வா' என்று வரவேற்பான்; இடையிடையே தேவையான பாவ நிலைகளைக் குறிப்பிடுவான்; மாலையில் 'போய் வா' என்று விடையளிப்பான்! இதைத் தவிர மற்ற நேரமெல்லாம் மௌனம்தான்! கலை உணர்வு தான் அவனை ஆட்சி செலுத்தி வந்தது!

அந்தச் சிற்பப் பணி நடைபெறுகின்ற இடத்திற்கு

கருணாநிதி

வேறு யாரும் அனுமதிக்கப் படுவதில்லை; இனியன்—சாமுண்டி இருவரைத் தவிர வேறு யாரும் அங்கிருப்பதுமில்லை.

எப்போதாவது அழகிக் கிழவி வருவாள்—மகளின் திறமையை வியந்து முத்தம் அளித்து மகிழ்வாள்; இனியனின் கலைத்திறன் பற்றிப் புகழ்வாள் — 'ஆண்டவனைக் காட்டிலும் சாமுண்டி அழகாக ஆடுகிறாள் — உண்மைதான்; ஆனால் அவனைக் காட்டிலும் அழகான கலைச் சிற்பங்களையெல்லாம் நீ படைத்திருக்கிறாய்' என்று அவனைத் தழுவி — உச்சி முகர்ந்து வாழ்த்துக் கூறுவாள்; பின்னர் போய் விடுவாள்

ஐம்பது நாட்களுக்குப் பிறகு ஒரு நாள், கல்லை மிக நுட்பமாகச் செதுக்கிக் கொண்டிருக்கும்போது, இனியனின் விரல் நுனியில் உளி பட்டுவிட்டது; நல்ல வாலிபனல்லவா — இரத்தம் குபுகுபு எனக் கொட்டியது!

சாமுண்டி பரபரப்படைந்தாள், உடனே தன் சேலைத் தலைப்பைக் கிழித்து அவன் விரலில் சுற்றிவிட்டாள்; அதன் காரணமாக இரண்டு நாள் வேலை தடைபட்டது; சாமுண்டி, கோயில் பக்கம் வரவில்லை; அவளைக் காணாதது இனியனுக்கு ஏதோ ஓர் ஏக்கத்தை எழுப்பியது!

அந்த ஏக்கம் எதனால் எழுந்தது? இத்தனை நாளாகத் தோன்றாத ஏதோ ஓர் உணர்வு இன்று எங்கிருந்து முளைத்தது? அப்படியானால், அவளைப் பற்றித் தவறான எண்ணம் தன் நெஞ்சின் அடித்தளத்தில் படிந்து கிடந்ததா? அந்த எண்ணம் — அவளைக் காணவில்லை என்றதும் — சிறகு முளைத்துக் கிளம்பிவிட்டதா? இவ்வளவு நாளும் அவளைக் கலைக்கண் கொண்டுதானே ரசித்து வந்தான் அந்தச் சிற்பி — இப்போது மட்டும் அவன் கண்களுக்குப் புதுப் பசியை உண்டாக்கியது யார்?

வேறு யாருமில்லை — அவளேதான், சாமுண்டியேதான்; அவள் பார்வையில் தனி அர்த்தம் இருந்ததா — இல்லை — இதுவரையில் அவன் கவனிக்கவில்லை; அவள் அழகைக் கண்டு அவன் வியந்திருக்கிறானே தவிர, மயங்கியது கிடையாது; இப்போது ஏனோ அவள் எழிலை நினைத்து உருகிக்கொண்டிருக்கிறான்!

அவள் ஆடிக் காட்டிய ஒவ்வொரு நிலையிலும், கலாதேவியின் சௌந்தர்யத்தைத்தான் அவன் பார்த்துப் பரவசமுற்றிருந்தான்; இப்போது அந்த அபிநயங்களின் போது அசைந்த அவள் அழகுத் திருமேனியின் ஒவ்வோர் அங்கமும் அவன் நெஞ்சத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தி — அவனைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கிறது!

ஒரு வேளை, அவளைக் காணாத காரணத்தால், ஏற்பட்ட தடுமாற்றமாக இருக்கக்கூடுமா? அங்ஙனமாயினும் அந்தத் தடுமாற்றத்தின் அடிப்படையில் ஏனோ ஓர் உணர்ச்சி தலை தூக்குவானேன்?

அந்த உணர்ச்சிக்கு நிச்சயமாகக் கல் மெருகு கொடுத்து மூடி மறைக்க அவன் தயாராக இல்லை!

இப்படி இரண்டொரு நாட்கள் அவனைப் பித்தனாக அலையவிட்ட சாமுண்டி, அவன் சிற்ப மண்டபத்தை நாடி வழக்கம்போல வந்து சேர்ந்தாள்; அவனும் வழக்கம் போலத்தான், 'வா' என்று அழைத்தான்; ஆனால் அவன் குரல் நடுங்கிற்று — அதை அவன் உணர்ந்தான். அவள் கவனிக்கவில்லை!

"விரலில் பட்ட காயம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள்.

'மருந்து எதுவும் போடவில்லை; உன் சேலைத் தலைப்பு பட்ட பிறகும் காயம் ஆறாமல் இருக்குமா?' என்று படபடவென்று கேட்டு முடித்து விட்டான்; அந்தப் பதைப்பு அடங்கச் சிறிது நேரமாயிற்று — அவனுக்கு!

அவள், அவனை மிரட்டுகின்ற பாவனையில் பார்த்தாள். இனியன் சமாளித்துக் கொண்டு 'ம்......இதுதான் இன்றைய சிற்பத்துக்குத் தேவையான பாவம்' என்று கூறியவாறு உளியைக் கையில் எடுத்துக் கல்லில் செதுக்கத் தொடங்கினான்.

அன்று வழக்கத்திற்கு மாறாக மாலைப்பொழுதுக்குப் பிறகும் சிற்ப வேலை முடியவில்லை!

'கொஞ்சம்தான் இருக்கிறது — முடித்துவிடலாம்' என்றுகூறி, தீப்பந்தங்களின் உதவியோடு அவன் வேலையில் கவனம் செலுத்தினான்.



அன்று வேலை வேகமாக ஓடாததன் காரணம் அவனுக்குத்தான் தெரியும் — சாமுண்டிக்குப் புரியவில்லை!

சிற்பச் சிலையின்மீது ஒரு கண்ணும் — சாமுண்டியின் மீது ஒரு கண்ணுமல்லவா இன்று இனியனுக்கு இருந்தது!

தீப்பந்த வெளிச்சத்தில் சாமுண்டியின் தங்கமேனி மேலும் தகதகாயமாய்த் தோன்றுவதை அவன் சுவைத்துக் கொண்டே ஒருவாறு அன்றையப் பணியை முடித்தான்.

"சிலை மிக அழகாயிருக்கிறது' என்று சாமுண்டி பாராட்டிவிட்டுத்தான் போனாள்; ஆனால் அவனுக்கு என்னவோ — அவ்வளவு திருப்தியில்லை!

இப்படியே சில நாட்கள் நகர்ந்தன சாமுண்டியின் உள்ளத்திலும் இனியனைப் பற்றிய குழப்பம் எழுந்திருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் அவள் முகத்தில் தோன்றிய வண்ணம் இருந்தன

⁂ ⁂ ⁂

அன்று எண்பத்தோராவது சிற்பத்திற்கான அபிநயத்தைச் சாமுண்டியிடம் அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இறைவன் நான்கு புஜங்களுடன் மானுடவும் — மழுவாடவும் யக்ஞோபவீதத்துடன் ஆடும் தாண்டவத்திற்கான பாவ நிலைகளை ஆடிக்காட்டு' என அவன் கூறியதும் அவளும் அந்தப் பாவத்தை அவனுக்குப் பகுதி பகுதியாகப் பிரித்து — அங்கங்களின் அசைவுகளைக் கூடத் தனித் தனியாக விளக்கிக் காட்டும் தோரணையில் ஆடிக் காட்டினாள்.

"இந்தக் கையைக் கொஞ்சம் உயரத் தூக்கினால் இன்னும் அழகாக இருக்குமல்லவா?' என்று கேட்டபடி அவன்; சாமுண்டியின் கரத்தைத் தொட்டு அதை உயரத் தூக்கப் போனான்!

அவளோ சட்டென்று அவனை விட்டு நகர்ந்து கொண்டாள்; அவள் கன்னம் சிவந்திடும் — நாணம் பொங்கிடும் — தலை குனிந்திருப்பாள் — என்றெல்லாம் எதிர்பார்த்த இனியன் ஏமாந்துவிட்டான்!

அவளோ, அப்படியொரு நிகழ்ச்சி நடக்காததுபோலத் தொடர்ந்து தன்னுடைய கலைப் பணியைத் தொடங்கினாள்!

இனியன் முகத்தில் அசடு வழிந்தது.

"அவள் என்னை விரும்பவில்லையா! 'இனியன் எழிலன்' என்று ஊர் முழுதும் பேசுவார்களே — என்னுடைய உடற்கட்டையும், உறுதியான தோள்களையும் பார்ப்பவர்கள், 'நீ இராஜ வம்சத்தில் பிறந்திருக்க வேண்டியவன்' என்று பாராட்டுவார்களே — அப்படிப்பட்ட என்னை இந்தச் சாமுண்டிக்கு மட்டும் பிடிக்கவில்லையா?' என்ற கேள்விகள் அவன் இதயத்தைச் சல்லடைக் கண்களாக்கிக் கொண்டிருந்தன!

அத்துடன் அன்றைய வேலையும் தங்கு தடையின்றி நடைபெற்றது; பயத்திலும் பரபரப்பிலும் அவன் வேலையில் தீவிரம் காட்டி — மாலைப் பொழுதுக்குள்ளாகவே அந்தச் சிலையை முடித்துவிட்டு, 'நாளைக்கு எண்பத்திரண்டாவது சிலை' என்று அவளிடம் கூறினான்

அன்றைய சிலையின் அழகை சாமுண்டி வெகுவாக விமர்சித்தாள்!

'நான் ஆடிக் காட்டிய பாவங்களைவிட — நேர்த்தியான பாவங்களைத் தங்கள் உளியின் வலிமையால் படைத்து விட்டீர்கள்' என்று அவள் புன்னகை பொங்கிடக் கூறியபோது அவன் இதயம் குளிர் தாமரைக்குளம் போல ஆயிற்று!

அவள் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்!

அவள் பின்னழகைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் கண்கள் இமைக்க மறந்தன; அவன் செதுக்கியிருந்த எண்பத்தோரு சிற்பங்களையும் பார்த்தான்; சிற்பங்கள் திடீரென மறைந்துவிட்டன; எண்பத்தோரு சாமுண்டிகள் அங்கே ஆடிக் கொண்டிருந்தார்கள்; அந்த ஆட்டத்திலே அவன் இலயித்துக் கிடந்தான்; கலை நினைவோடு உருவாக்கப்பட்ட அந்தச் சிலைகள், சாமுண்டியின் உருவில் அவன் உள்ளத்தில் காதல் தீயை மூட்டிவிட்டுத் தாண்டவமாடிக் கொண்டிருந்தன; அந்தப் பெரு நெருப்பின் ஜுவாலையை அவனால் தாங்கத்தான் முடியவில்லை; தனக்குத்தானே அறிவுரை கூறிக் கொண்டான்; பால் பானையை உருட்ட வந்த பூனையை எத்தனை முறை விரட்டினாலும், அது ஓடிஓடிப் பின்னர் பதுங்கிப் பதுங்கிப் பால் பானையைத்தான் வட்டமிடும்; அது போலாயிற்று — அவன் உள்ளத்தில் கொப்பளித்துக் கிளம்பிய காதல் மகாசக்தி!

மறுநாள் எண்பத்திரண்டாவது சிற்பத்தைச் செதுக்க அவனும் தயாராக இருந்தான் — அவளும் வந்து சேர்ந்தாள்.

அவன் அவளைப் பார்வையாலே வரவேற்றான்; 'வா' என்று கூற நா எழவில்லை!

"இன்று எண்பத்திரண்டு அல்லவா' — அவள்

"ஆமாம்' — அவன்

"இன்னும் இருபத்தெழு இருக்கிறதே' — அவள்.

"ஏன் — உனக்குக் கஷ்டமாக இருக்கிறதா? கலை கூடவா திகட்டி விட்டது?"

"இல்லை இல்லை; இன்னும் எத்தனை இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தேன் — அவ்வளவுதான்!'

"நான் நினைக்கிறேன் — 'இன்னும் நூறு சிற்பங்கள் பாக்கி இருக்கக்கூடாதா? அத்தனை நாளும் சாமுண்டியின் கலையழகைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்கு ஏற்படக் கூடாதா என்று!'

'நான் நினைக்கிறேன் — 'அரசர்க்கு அரசர் நூற்றெட்டுச் சிற்பங்களை ஏன் செதுக்கச் சொன்னார் — எண்பத்திரண்டுதான் என்று கூறியிருக்கக்கூடாதா என்று'

"கேலி செய்கிறாயா, சாமுண்டி!'

(11-ம் பக்கம் பார்க்க)

மாவட்ட தி. மு. க. நிர்வாகிகள்

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் பட்டியல் வருமாறு :—

வட ஆற்காடு மாவட்டம்

அவைத் தலைவர் ; வி. எம். தேவராஜ்

செயலாளர் : பாபு ஜனார்த்தனம்

துணைச்
செயலாளர் ; இரா. நடேசன் (வடக்கு)
(தெற்கு) தா. நடராசன்

பொருளாளர் : பி. டி. ஆர். நர்கராசன்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

எஸ். முருகையன், துரை முருகன், எம். எல். ஏ., நா. வீராசாமி, எம். எல். சி., மா. மாரப்பன்

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

தி ஆ முகமது சகி; பி. ஏ. பி. எல். மு. கோதண்டன், எம். எஸ். இராதா கிருட்டிணன், ஆர். சம்பங்கி. கே. கோவிந்தசாமி, எஸ். அப்துல் ரசாக், பூபால இளங்கோ, வி. டி. தேவராஜ், கே. எம். ஏ. அப்துல் கே ஏ. சுட்பு, கே. எம் எல்லப்பன். அ. ந. அரங்கநாதன், ஏ. க. துரைசாமி (முன்னாள் எம். எல். ஏ.) எஸ். ஆர். முனுசாமி.

திருச்சி மாவட்டம்

அவைத் தலைவர் ; ஆர். நாகசுந்தரம்

செயலாளர் ; அன்பில் தர்மலிங்கம்

துணைச்
செயலாளர் ; அரு சோமசுந்தரம் (வடக்கு)
(தெற்கு) சுப. இராஜகோபால்

பொருளாளர் ; எம். பால கிருட்டிணன்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

எஸ். நல்லுசாமி, எஸ். ஏ ஜி. நாபி, சிவசுப்ரமணியம். எஸ் கே. வடிவேலு,

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

டி. என். பாக்கியராஜ், ஆ. மலர்மன்னன், இரா. சின்னசாமி, கே. எஸ். வேலுசாமி, மு. ரகமத்துல்லா; எ. இ. கே. கரிகாலன், ஆ. துரைராசு. எஸ். எம். பீர்முகமது. க. நல்லுசாமி எம். பால கிருட்டிணன்,

சேலம் மாவட்டம்

அவைத் தலைவர் ; பொன்னுமலை

செயலாளர் ; ராசிபுரம் முத்து

துணைச்
செயலாளர் ; தீர்த்தமலை (வடக்கு)
(தெற்கு) தமிழழகன்

பொருளாளர் ; பெரியண்ணன்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

வீரபாண்டி ஆறுமுகம், அழகப்பன், ஆறுமுகம். மார்முத்து,

பொதுக்குழு உறுப்பினர்கள்.

எம். எம். கந்தசாமி, க. மருதமுத்து கருப்பையா, நமச்சிவாயம், க. ராமசாமி அ. பாலு. கலையமுதன், கே. வி. பெரியசாமி, எம். ஆர். ஆறுமுகம்.

தர்மபுரி மாவட்டம்

அவைத் தலைவர் : பி திம்மராயன்

செயலாளர் - எம். சென்னகேசவன்

துணைச்
செயலாளர் பி. வி. எஸ். வெங்கடேசன்
(மேற்கு)
(கிழக்கு) டி. பொன்னுசாமி

பொருளாளர் : து. சென்னியப்பன்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

வி. சி. கோவிந்தசாமி. எம் பி. முனுசாமி

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

பி. ஆர். ஆஞ்சநேயன், ஏ. அல்லிமுத்து நா. ஆறுமுகம. எம். கிருஷ்ணன். கே. பெரியசாமி எம். கோவிந்தராசன்' பி. ஏ., பி. எல். வி. சுவாமிநாதன்.

நீலகிரி மாவட்டம்

அவைத் தலைவர் , டி. பி. எஸ். மணி

செயளாளர் : ஆர். ராசு

துணைச்
செயலாளர் ; எச். தங்கம்

பொருலாளர் : S. S. G. இராஜு

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ;

ஜே. மாதா கவுடர்

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

க. அரங்கசாமி மு. அரங்கநாதன், ஜே. ராமன் வி. சா. ஒளிபழகன்

மதுரை மாநகர் மாவட்டம்

அவைத் தலைவர் : பிர பண்டரிநாதன்

செயலாளர் ; சொ. காவேரிமணியன்

துணைச்
செயலாளர் ; ஏ. வி. ராசு (வடக்கு)
(தெற்கு) எம். ஆர். சங்கரன்

பொருளாளர் : எஸ். பாண்டியன்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்.

பொ. ராமச்சந்திரன்

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

நா. தாசீனி, எஸ். பாண்டியன், எஸ். பெருமாள். சோ. அழகர்சாமி. இரா. வேலு.

மதுரை மாவட்டம்

அவைத் தலைவர் ; கே. எஸ். கோபால், எம். ஏ.

செயலாளர் ; பொன்முத்து ராமலிங்கம். பி. ஏ., பி. எல்.

துணைச்
செயலாளர் ; (மேற்கு) எம். கே. ஏ. சாமி
(கிழக்கு) தமிழ்மாறன்

பொருளாளர் ஏ. எம். அனிபா

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

நா. நடராசன், எம். ஏ. இராசு. தங்கராசன், ப. முத்துசாமி, பி. ஏ., பி. எல். ப. பாண்டி.

பொதுக்குழு உறுப்பினர்கள்.

தி. ராசு, எஸ். பி. ஏ. ராசா. எம். கே. ஆறுமுகம், பெ. தென்னவன், எஸ். அழகுமலை, தி. அன்பழகன். கா. இராசேந்திரன்; உ. மா. கண்ணுசாமி, குமாரவேலு, எ. எஸ். அனிபா, கே. சாமிதுரை, டி. எஸ். வி. வி. தியாகராசன்.

குமரி மாவட்டம்

அவைத் தலைவர் : S. H. சாகுல் அமீது

செயலாளர் ; எஸ். இரத்தினராஜ்,

துணைச்
செயலாளர் ; (கிழக்கு) T. A. சேவியர்
(மேற்கு) க. அ. இராசப்பா

பொருளாளர் ; G. கிரிஸ்டோபர்

செயற்குழு உறுப்பினர்கள் ;

டி. ஆர் சுந்தரம், தோப்பூர் மு. சுப்பிரமணியம்,

பொதுக்குழு உறுப்பினர்கள்.

எஸ் எம். அனிபா, கே. சுப்பிரமணியம், அ செல்லத்துரை, கே. சொக்கலிங்கம், ஆ இராகவையா, சி. பாலஸ், அ. ஜார்ஜ் கே முத்துராசு, ஜே. தேவராஜ், வி. எலியாஸ் பி கிட்டப்பன் (என்கிற) பி. கிருஷ்ணன், எஸ் எம். சாகுல் அமீது,

மாநில அமைப்புக் குழு நிர்வாகிகள்

ஆந்திர மாநிலம்

அவைத் தலைவர் : C. நந்தகோபால்

மாநில அமைப்பாளர் ; கே. முகமது அலி,

துணை அமைப்பாளர்கள் : (கிழக்கு) V முனி கிருஷ்ணா ரெட்டி
(மேற்கு) கு. ம. எழிலன்

பொருளாளர் K. A. முனுசாமி

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

ஏ. இராமலிங்கம். சி. சுடரமணியம்,

பொதுக்குழு உறுப்பினர்கள்

எச். அகமத். கே. எஸ் அச்சுதன், பி. ஏ. அலியார். எம் எஸ். ..லார் ஜி கிருஷ்ணன். க. கோவிந்தசாமி, எம் எஸ். சீனிவாசன், பி. தர்மராஜுலு, டி. ஏ. நாராயணராவ். என் பி வீராசாமி,

புதுவை மாநிலம்

அவைத் தலைவர் : திரு. R. பலராமன்

மாநில அமைப்பாளர் ,
எம் ஏ. சண்முகம்,

துணை அமைப்பாளர் ;
(வடக்கு) செ. முத்து
(தெற்கு) அப்துல் முகமது

பொருளாளர் மா. வேணுகோபால்

தலைமைச் செயற்குழு :

என் வி. இராமலிங்கம், கோ. சாரங்கன் சி. பி. திருநாவுக்கரசு,

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

ஆ. இராசையன், நா. இராமசாமி, சி. செல்வராசு அ. சோமசுந்தரம், டி. தீனதயாளன, அ. நடராசன், சா. நாராயணன், ஆர். பழனிவேல், கோ. புகழேந்தி, நா. செயராமன்.

கர்நாடக மாநிலம்

அவைத் தலைவர் ; திரு. V. K. நடேசன்

மாநில அமைப்பாளர் ; டி. திராவிட மணி,

துணை அமைப்பாளர்கள் ;

அ. முருகேசன், மா. மன்னன்,

பொருளாளர் : கு. கேசவன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;

வி சிவசங்கரன், எஸ். என். நாராயணன். டி. எஸ். மணி,

பொதுக்குழு உறுப்பினர்கள் ;

எஸ் மூர்த்தி பி, கண்ணன். வி டி. சண்முகம், ஐ. கண்ணன் ஆர். நாராயணன், சி. ஏ பசுமலை, எஸ் அமலநாதன், தஞ்சை சின்னையன்; ஐ. மோகன்ராஜ், கி. சண்முகம்,

★ பாவமன்னிப்பு வேண்டுகிறார் ஓர் அர்ச்சகர்! ★

இது ஒரு அர்ச்சகரின் வாக்குமூலம் — அல்லது 'பாவமன்னிப்பு! பிரபல கன்னட மாத இதழான 'மல்லிகை'யில் வெளியாகியிருக்கும் இக் கடிதம் — 'பெரும்பான்மையான கோயில்கள் விபச்சார கூடங்களாகவே இருக்கின்றன' என்ற இங்கர்சாலின் கூற்றை நமக்கு நினைவுபடுத்துகிறது. 'புனிதவான்கள்' என்று போற்றப்படும் எத்தனையோ அர்ச்சகர்கள் இருட்டிய பிறகு கோயிலில் நடத்தும் 'திருவிளையாடல்'களை இக் கடிதம் வெளிப்படுத்துகிறது

இரண்டு கண்களுடைய மனிதர்களையும், மூன்று கண்களுடைய 'சிவனை'யும் மோசடி செய்த அர்ச்சகன் நான்! இளமையில் 'சொர்க்கம்' 'நரகம்'—பற்றி எனக்குத் துளிகூட நம்பிக்கையில்லை; இப்போது முதுமை அடைந்து விட்டேன். சாவு குறித்த அச்சம் என்னைக் கவ்விக் கொண்டது.

நான் செய்த பாவச் செயல்களை நினைக்க நினைக்க, அவைகளுக்காக எப்பேர்ப்பட்ட நரகத்தில் கிடந்து உழலப் போகிறேனோ என்ற சிந்தனையால் இராத் தூக்கங்களையும் இழந்து விட்டேன்.

நான் செய்த பாவச் செயல்களை இப்போது நினைத்தால்கூட உடம்பெல்லாம் 'ஜில்' என்று குளிர் பரவுவது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

நான் அர்ச்சகனைச் சேர்ந்து நாற்பது ஆண்டுகள் ஓடி விட்டன; இப்போதுஎன்னுடையவயது அறுபது. அர்ச்சகனைச் சேர்ந்த புதிதில் சாமிக்குச் சாட்டியிருக்கும் நகைகளைத் திருடும் துணிவு ஏற்படவில்லை. கோயில் விளக்கிற்காக வாங்கும் எண்ணெய், வாழைப் பழம், 'நைவேத்திய'ப் பொருட்கள் போன்றவற்றைக் கோயில் நிர்வாகிகளுக்குத் தெரியாமல் திருடி என் வீட்டிற்குக் கடத்திக் கொண்டிருந்தேன்.

'தட்சணை' கொடுக்காதவர்களை நீண்ட நேரம் காக்க வைத்த பிறகு தான் 'பூசை' செய்வேன்.

என்னைப் புரிந்து கொண்ட பக்தர்கள் என்னிடமிருந்து (கோயிலிலிருந்து) விடுபட்டால் போதுமென்று கற்பூரத் தட்டில் 'தட்சணை'யை நிறையப் போடுவார்கள்.

கோயிலில் சேர்ந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் கோயிலைச் சுத்தம் செய்துவந்த ஓர் தாழ்த்தப்பட்ட பெண்ணுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவள் கர்ப்பிணி ஆகிவிடவே அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே அவளை ஒரு 'பிராமணப் பெண்' என்று கூறவேண்டியதாயிற்று.

என் வாழ்க்கையில் நான் ஒரிரு முறைகள் தான் உண்மை பேசியிருக்கிறேன்.

இரவுகளில் அந்தத் தாழ்த்தப்பட்ட பெண்ணோடு ஒன்றாகப் படுத்துறங்கிய பிறகு— காலையில் எழுந்திருக்க நேரமாகிவிடுகிற காரணத்தால் குளிக்காமலேயே கடவுளுக்குப் பல முறைகள் பூசைகள் நடத்தியிருக்கிறேன்.

அவளால் மூன்றுபெண் குழந்தைகளுக்கு நான் தகப்பனானேன். அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டிய பெருஞ்சுமை என் தோளில் விழுந்தபோது, கோயில் உண்டியலை உடைத்து ஏராளமான பணத்தையும், சாமிக்குச் சாற்றியிருக்கும் பல நகைகளையும் களவாடினேன்!

வீட்டிற்குத் தேவைப்படும் மின்விளக்குகளைக் கூடக்கோயிலில் இருந்து தான் யாரும் காணாது கழற்றிச் செல்வேன்.

கோயிலைச் சேர்ந்த பண்ட பாத்திரங்களை உணவு விடுதிகளுக்கு வாடகைக்குக்கொடுத்துப் பணம் ஈட்டினேன். கோயிலுக்குள்ளேயே பீடி, சிகரெட் புகைப்பேன்; மது அருந்துவேன்.

சமயங்களில் கோயிலினுள்ளே 'இரவு ராணி'களுடன் இன்பம் துய்ப்பதுமுண்டு.

நான் இழைத்த குற்றங்களுக்குப் 'பிராயச்சித்தம்' ஏதேனும் உண்டா? ★

—இப்படிக்கு
'பாவி'

(தகவல்: ந. சுந்தர், பெங்களூர்)

இந்தியப் பொருளாதாரத்தில் கறுப்புப் பணம்!

— வாஞ்சைநாதன் —

பாமர மக்கள் முதல் படித்தவர் வரை கறுப்புப் பணத்தைப் பற்றிப் பேசாதவர்கள் நாட்டில் இல்லை எனலாம் இக்கட்டுரை கறுப்புப் பணத்தின் தன்மைகளையும் அதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தீமைகளையும் விளக்க ஓரளவு முயற்சிக்கிறது

பொருளாதார அடிப்படையில் பார்த்தால் கறுப்புப் பணம் என்பது அரசாங்கத்திற்குரிய வரியைச் செலுத்தாமல் தவறான முறையில் சமுதாயத்தை ஏமாற்றி மூடி மறைக்கப்பட்ட பணமாகும். கறுப்புப் பணம் போன்று நாட்டில் கறுப்புச் சொத்துக்களும் (Black wealth) உள்ளன. கறுப்புப் பணத்தில் அதிக விலைக்குச் சொத்துக்களை வாங்கி வருமான வரித் துறைக்குக் குறைந்த மதிப்பீடு காட்டப்படும் சொத்து— கறுப்புச் சொத்து! கறுப்புப் பணம் ஏன் தோன்றுகிறது?

அரசாங்கம் பல வரிகளைப் போடுகிறது. தனி மனிதன் வருமானத்தின் மீதும் தனிப்பட்ட நிறுவனங்களின் வருமானத்தின் மீதும் அரசாங்கம நேரடியாக சில வரிகளைப் போடுகிறது இந்த வரிகளுக்கு 'நேர்முக வரி' என்று பெயர் இந்த வரிகளில் தலையாய வரி வருமான வரி தான். நேர் முக வரிகளிலேயே அரசாங்கத்திற்கு அதிக வருவாய் தேடித் தருவது வருமான வரிதான்! கறுப்புப் பணத்தை அதிக அளவில் உருவாக்குவதும் இந்த வரி தான்!

1939 ஆம் ஆண்டிற்குப் பிறகு கறுப்புப்பணம் இந்தியாவில் தலை காட்டத் தொடங்கியது சிறைத் தண்டனை போன்ற கடுமையான நடவடிக்கைகள் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தியது.

விடுதலை பெற்ற இந்தியாவில்தான் கறுப்புப் பணம் தனது 'திருவிளையாடல்'களைச் செய்யத் தொடங்கியது; காரணம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய் திட்டங்களுக்காக முதலீடு செய்யப்பட்டது. புதிய அணைகள் கட்டுவதற்கும், புதிய சாலைகள் அமைப்பதற்கும் தனிப்பட்ட நிறுவனங்களிடம் அரசு பல காண்டிராக்டுகளைக் கொடுத்தது. இதன் காரணமாகப் பல புதிய பணக்காரர்கள் தோன்றினார்கள். இவர்கள் 'காண்டிராக்டுகள் மூலம் அடித்த கொள்ளை லாபங்களை கறுப்புப்பணமாக நாட்டில் நடமாடவிட்டார்கள். மேலும் கறுப்புப்பணத்தின் மூலம் பல தொழில் அனுமதிகளையும் பல புதிய காண்டிராக்ட்டுகளையும் பெற்றனர். இப்படியாக ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்ட முடிவிலும் இந்தியாவில் பல கறுப்புப் பண முதலைகள் தோன்றினர்.

இதைத் தவிர கள்ளக்கடத்தல்கறுப்பு அங்காடியில்ஈடுபடுவோர் தொகையும் அதிகரித்தது. அந்நியச் செலாவணி மோசடிகளும் நாட்டில் . அதிகம் தோன்றின திரைபபடத் தொழில்களில் ஈடுபடுவோர் வட்டித் தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் ஆண்டுதோறும் அதிக வருமானம் பெறுபவர்கள் தங்கள் வருமானத்தைக் குறைத்துக்காட்டி வரி ஏய்ப்பு செய்து கருப்புப்பணத்தை சேர்த்தனர் இப்படி பல்வேறு காரணங்களால் கறுப்புப் பணத்தின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது; வருகிறது.

இந்தியாவில் கறுப்புப் பணத்தின் மொத்த மதிப்பை இதுவரை யாரும் உறுதியாகக் கணக்கிடவில்லை எல்லோரும் சுமாராக இவ்வளவு கோடி இருக்கும் என்று கூறிவருகிறார்கள்

மத்திய அரசால் 1953-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட வரி விதிப்பு ஆய்வுக்குழு இந்தியாவில் உள்ள கறுப்புப்பணத்தின் அளவைக் கண்டு பிடிப்பது மிகவும் அரிதாகும் என்று கூறியுள்ள அக்குழு இந்தியாவில் கறுப்புப் பணத்தின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்பதை மட்டும் அரசுக்கு எச்சரித்தது.

கறுப்புப் பணம் இந்தியாவில் எந்த வகைகளில் [illegible] படுத்தப்படுகிறது என்[illegible] பார்ப்போம்.

நிர்வாகச் சீர்திருத்த குழுவால் நியமிக்கப்பட்ட (1965) குழுவினரின் அறிக்கை கீழ்க்கண்ட முறைகளில் கறுப்புப் பணம் மறைத்து வைக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

(1) உள்ளூர்காரர்களிடம் வட்டிக்குக் கொடுக்கும் பணம்.

(2) தங்கம், வைரம் போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்கி, அவைகளை வங்கியின் ரகசிய அறையில் பூட்டுவது. அல்லது பல ரகசிய இடங்களில் மறைத்து வைப்பது.

(3) தொழிற்சாலைக்குத்தேவையான மூலப் பொருட்களை பில் போடாமல் வாங்குவது, தொழிற்சாலையில் தயாரான பொருட்களை மற்ற வியாபாரிகளுக்கு பில் போடாமல் விற்பது. இவ்வித நடவடிக்கைகளினால் கணிசமான கறுப்புப்பணம் தோன்றியுள்ளது.

(4) இரகசிய கிடங்குகளில் உறங்கிக் கொண்டிருக்கும் தானிய மூட்டைகள். இம் மூட்டைகள் கறுப்புப் பணத்தால் வாங்கப் பெற்றவை. விலை ஏறும் என்று எதிர்பார்த்து, விலை ஏறியவுடன் தானியங்களை விற்று மீண்டும் கறுப்புப்பணம் சம்பாதிப்பது.

[10-ம் பக்கம் பார்க்க]

சோஷலிசம் - வெகுதூரக் கனவே!

காங்கிரஸ் அல்லது ஜனதா — எந்தப் பெயரில் யார் ஆண்டாலும், இந்திரா அல்லது மொரார்ஜி தேசாய் போன்ற எந்தத் தனி நபர் ஆட்சிக்கு வந்தாலும். அரசியல் சூழ்நிலையை ஆட்டுவிப்பது — சரித்திர நிகழ்ச்சிகளின் வேகமான போக்கே!

இந்தியாவை இன்றளவும் ஆள்வது, நிலப்பிரபுக்கள் முதலாளிகள் ஆகியோரின் பிரதிநிதிகளே; ஜனநாயகத்திற்காகவும், உரிமைகளுக்காகவும் இன்றளவும் நாம் போரிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். சோஷலிசம் என்பதுகூட இன்னும் ஒரு வெகுதூரக் கனவாகவே இருக்கிறது.

கே. ஏ. அப்பாஸ் எழுதிய
'25 the March 1977 A Day liky any Other Day' – புத்தகத்திலிருந்து]

கறுப்பு பணம்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

(5) கறுப்புப் பணம் மூலம் கோட்டாக்களையும்லைசென்சுக்களையும் வரங்குவது.

(6) கள்ளக்கடத்தலில் வரும் பொருட்களை பில் இல்லாமல் விற்பதால் ஏற்படும் பணம், இந்தியாவில் இது தொடர் நடவடிக்கையாகும்.

(7) வீடு, நிலம் போன்ற அசையாச் சொத்துக்களில் இருக்கும் பணம். பினாமி பெயர்களில் இந்தச் சொத்துகள்,

(8) லாபத்தில் ஓடும் தொழிற்சாலைகளுக்கு, மேலும் தொழில்வளத்தைப்பெருக்கக் கணக்கில் காட்டாமல் வட்டிக்குக் கொடுத்தல்,

(9) வசிக்கும் வீடுகளை கணக்கில் குறைத்துக் காட்டி அதிக விலைக்குக் கொடுத்து வாங்குவது. 'பகடி' கொடுத்தல்,

(10) இரகசியமாக வெளிநாடுகளில் கொடுத்துவைத்துள்ள பணத்தின் மூலம் இறக்குமதி செய்தல். இறக்குமதிசெய்யும் போது இறக்குமதி செய்யும் பொருட்களை அதிக விலைக்கு வாங்கி குறைத்து மதிப்பீடு செய்தல்.

(11) அந்நியச் செலாவணிகளை அரசாங்கத்திற்குத் தெரியாமல் கறுப்புப் பணத்தின் மூலம் வாங்கி, வெளிநாடுகளில் ஆடம்பரமாகச் செலவழிப்பது.

(குறிப்பு: தமிழகக்கறுப்புப் பணப்புள்ளி இந்த விவகாரத்தில் மாட்டிக்கொண்டு மத்திய அரசிற்கு மண்டியிடுவதை கவனத்தில் கொள்க)

(12) ஆடம்பரப் பொருட்களை வீட்டில் வைத்திருத்தல் ஆடம்பரச் செலவு செய்தல்.

(13) ஆடம்பரத்திருமணம், மத சம்பந்தமான செலவுகள் சமூக விருந்துகள் நடத்துதல்,

(திருப்பதி உண்டியலில் அடிக்கடி கத்தை கத்தையாகப் பண நோட்டுகளைப் போடுவதும் கறுப்புப்பணம் தான்)

(14) லஞ்சம் கொடுத்தல்,

கறுப்புப்பணத்தால் பொருளாதாரம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

விலை ஏற்றத்திற்குக் கறுப்புப் பணமும் முக்கிய காரணமாகும். விலை ஏறினால் தொழிற்சாலையில், அரசு அலுவலகங்களில் பஞ்சப்படி உயர்த்தப்படுகிறது. ஆனால் மற்ற 60 விழுக்காடு மக்களுக்கு ஊதிய உயர்வு தரப்படுவதில்லை; அதுமட்டுமல்லாமல் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் பலன்களையும் அதனால் கிடைக்கும் எல்லாவித நன்மைகளையும் இந்த மக்கள் துய்ப்பதுகிடையாது. ஆகவே கறுப்புப் பணம் நிரந்தரமாகச் சுரண்டல் வர்க்கத்தையும், சுரண்டப்படுவோரின் வர்க்கத்தையும் உருவாக்குகிறது.

மற்றொரு வகையில் பார்த்தால் கறுப்புப் பணம் சமுதாய ஒழுக்கங்களை அடியோடு தகர்க்கிறது எனலாம். நேர்மையாக உழைக்க வேண்டும், நேர்மையாக அரசிற்கு வரிசெலுத்த வேண்டும் என்று எண்ணும் மக்கள் மத்தியில் பலவித சபலங்களை உருவாக்குகிறது. உழைக்காமலேய கறுப்புப் பணத்தின் மூலம் அரசியல் செல்வாக்கும், சமுதாயசெல்வாக்கும் பெற்று வருகிற கறுப்புப்பண புள்ளிகளைக் காணும்போது, உழைப்பதற்கு ஊக்கம் எங்கே வரும்? சமுதாயத்தின் அடிப்படை ஒழுக்க உணர்வையே இவ்வாறு கறுப்புப் பணம் சாய்க்கிறது.

இப்படிப்பட்ட கறுப்புப் பணத்தின் ஆதிக்கத்தைத்தகர்ப்பதற்கு மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட பல குழுக்களின் பரிந்துரைகளையும் காண்போம்.

வாஞ்சுகுழுவினர் 1 ரூபாய், 10,000, 5000, 1000. 100, 10 நோட்டுகளை செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்றும் (இடைக்கால அறிக்கையில்)

2 பண வைப்பிற்கு உச்சவரம்பு கொண்டு வர வேண்டும் என்றும்,

3. அதிக விலைக்குச் சொத்துக்களை வாங்கிக் குறைத்து மதிப்பீடுக் காட்டப்படும் அசையாச் சொத்துகளை அரசாங்கம் பறிமுதல் செய்தல் வேண்டும் என்றும் கூறியுள்ளனர். மேற்கூறிய நடவடிக்கைகளைக் கொண்டு வந்தால் நிச்சயமாகக் கறுப்புப் பணம் ஒழியும்.

கறுப்புப் பணத்தை ஒழிக்கக் கடுமையான தண்டனைகளைக் கொடுக்க வேண்டும்; கடுமையான தண்டனைகளை கொடுப்பதற்கு நேர்முகவரி சட்டத்தின் விதியில் இடம் இருக்கிறது என்று நேர்முக வரி நிர்வாக ஆய்வுக்குழு 1958—59 ஆண்டிலேயே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. கடுமையான தண்டனை என்பது சிறைத் தண்டனையாகும். அதுமட்டுமல்ல அக் குழுவே சில உதாரணங்களை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளது 1939 ஆம் ஆண்டிற்கு முன்னர், அடிக்கடி. பிரிட்டிஷ் அரசாங்கம் கறுப்புப் பணக்காரர்களுக்குசிறைத்தண்டனை வழங்கியதால், கறுப்புப்பணம் அப்போது குறைந்து இருந்தது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது. சிறைத் தண்டனை போன்ற கடுமையான தண்டனைகள் மூலம் வரி ஏய்ப்பைத் தடுக்கமுடியும் என்று அக் குழு கூறியுள்ளது.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழுவின் மேற்கூறிய பரிந்துரைகளை ஏற்காமல் தாமேமுன்வந்து கணக்குகளைக் காண்பிக்கும் திட்டத்தைக் கொண்டு வருவதால் பல தீமைகள் பொருளாதாரத்திற்கு ஏற்படும்.

முதன் முதலாக, பொருளாதாரக் குற்றத்தைப் புரிந்த கறுப்புப்பணக்காரர்களை இத்திட்டம் நல்ல பணக்காரர்களாக, 'வெள்ளைப் பணக்காரர்களாக மாற்றி விடுகிறது.

இரண்டாவதாக, இத் திட்டத்தின்படி கறுப்புப் பணத்தைக் கொண்டு வந்து வெள்ளைப் பணமாக மாற்றிக்கொள்ளும்போது, இந்தக் கறுப்புப் பணம் எப்படி வந்தது என்பதை வருமான வரி இலாகாவிற்குக் காட்ட வேண்டிய அவசியமில்லை. வருமான வரி இலாகாவும் பணம் சம்பாதித்த வழியையும் கேட்காது.

இத் திட்டத்தின்படி கொள்ளை அடித்து, கள்ளக் கடத்தலில் ஈடுபட்டு கறுப்பு மார்க்கெட்டில் பணம் ஈட்டி, ஊரை ஏமாற்றி உலையில் போட்டு பணம் சம்பாதித்து வைத்திருந்தால் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையோ அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையோ அரசாங்கம் அவர்களை நல்ல, வெள்ளைப் பணக்காரர்களாக மாற்றிவிடும். ஆகவே எதிர்காலத்தில்கூட நன்றாகக் கொள்ளையடியுங்கள். கள்ள மார்க்கெட்டைத் தொடர்ந்து செய்யுங்கள், கள்ளக் கடத்தலை வேகமாகச் செய்யுங்கள், நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்குங்கள் என்று அரசாங்கம் ஊக்குவித்து 'ஊக்க போனசையும்' இத் திட்டத்தின்மூலம் சமுதாய விரோதிகளுக்குத் தருகிறது. இதைத் தவிர இத் திட்டத்தினால் ஒருவித நன்மையும் இல்லை.

மேற்கூறிய விளைவுகளால் நாட்டில் பொருளாதாரம் நாசமாகிறதே என்று மத்திய அரசுக்குத் தெரியாதா? தெரியும்; தெரிந்தும் ஏன் சும்மாஇருக்கிறது இங்குதான் தான் அரசியல் புகுந்து விளையாடுகிறது. இதை ஜோதிர்மயபாசு அவர்கள் 1970-ஆம் நாடாளு மன்றத்தில் கூறினார். 1970-ஆம ஆண்டு ஆண்டு வாஞ்சு குழுவின் இடைக்கால அறிக்கையைக் காட்டி, அதிலுள்ள பரிந்துரைகளை அப்படியே ஏற்கப் போகிறேன் என்று கூறி 1971—ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது முதலாளிகளிடம் இந்திரா காந்தி பல கோடி ரூபாய்கள் வாங்கினார் என்று பாசு குற்றம் சாட்டினார். அது மட்டுமல்ல, வருமான வரித்துறையை ஆயுதமாக வைத்துக் கொண்டு இந்திரா தமிழகக் கறுப்புப்பணப் புள்ளியை அடிபணிய வைத்தார் என்பது தமிழகம் கண்ட அனுபவமாகும்.

ஆகவே கடந்த 31 ஆண்டுகளாக மத்தியில் வருகின்ற எந்த ஆளும் கட்சியும். உருப்படியான பொருளாதார நடவடிக்கைகளை ஏற்கத் தயங்குகிறது. அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்டு மத்திய அரசு அதிகார போதையில் தடுமாறிக் கொண்டு இருக்கிறது.

ஆகவே மத்திய அரசு, தன்னிடம் உள்ள அதிகாரத்தை சரியான முறையில் பயன்படுத்தி, நடவடிக்கை எடுத்து இருக்குமேயானால் குறைந்தது ரூபாய் 8000 கோடி அளவுக்குக் கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டு வந்திருக்கலாம். நமது தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரத்தை மாநில அரசிடம் ஒப்படைத்தால், பல கோடி பெறுமான கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று அறிவித்தார். ஆனால் அந்த அருமையான யோசனையையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. வருமான வரி மூலம் கிடைக்கும் வருவாய் மாநில அரசுகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ஆகவே எதிர்காலத்திலாவது மாநில அரசுகளின் ஒத்துழைப்போடு மத்திய அரசு கறுப்புப் பணத்தை ஒழிக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கலாம்.

உண்மை வெளிப்பட ஒரு வாய்ப்பு!

கே: சர்க்காரியா கமிசனின் அறிக்கையைத் தொடர்ந்து எம்மாதிரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: எனக்குத் தெரியாது— அது குறித்து நான் கவலைப்படவில்லை. தெளிவான நிலையிலிருக்கும் நானொரு அஞ்சா நெஞ்சினன்; வழக்கு மன்றத்திற்கு நாங்கள் இட்டுச் செல்லப்பட்டால் அதற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைவதைத் தவிர வேறொன்றுமில்லை. அதன் பிறகாவது குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்புகள் எங்களுக்குக் கிடைக்கும்; பிறகு உண்மையும் வெளி உலகிற்குத் தெரியவரும்!

['சண்டே' ஆங்கில இதழுக்கு (ஜூன் 11 78) கழகப் பொருளாளர் சாதிக்பாட்சா அளித்த பேட்டியிலிருந்து]

M.K. TRADERS ★ MK ★ MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை -24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

சாரப்பள்ளம் சாமுண்டி....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

"இல்லே, இல்லே...ம் ; வேலையைப் பார்ப்போம்; வீண் பேச்சு எதற்காக?"

சாமுண்டி, நடன நிலைக்கான 'பாவங்களைக் காட்டத் தயாராகி நின்ருள்; இனியனும் உளியை எடுத்துக் கொண்டு கல்லிடம் சென்ருன்; அவனுக்கு உளியைப் பிடிக்கக்கூடச் சக்தியில்லாததுபோல ஓர் உணர்வு— மயக்கம்!

"சௌந்தர்யத் தாண்டவம் —என்ருன் தழுதழுத்த குரலில்; அவன் நாக்கு ஒட்டிக்கொண்டது; அவள் ஆடத் தொடங்கினுள்!

அவளே சௌந்தர்யச் சுரங்கம்—அதிலே சௌந்தர்யத் தாண்டவம் ஆடச் சொன்னுல் எப்படியிருக்கும்?

அவன் தலே கிறுகிறுத்தது; இராசராசேச்சரத்தின் தலை கீழாகச் சுற்றுவது போன்ற ஒரு நினைவு, அவனையும் மீறி அவன் கையிலிருந்த உளி, கலைப்பணியில் ஈடுபட்டிருந்தது!

அவள் பூமியில் ஆடவில்லை —அவன் மென்மையான இதயத்தில் ஆடினுள்; அவன் விழிமணிகளில் ஆடினுள்; அவன் நரம்பு நாளங்களில் ஆடினுள்; இரத்தத் துளிகள் ஒவ்வொன்றிலும் ஆடினுள்; ஆடினுள்—ஆடினுள் — ஆடிக்கொண்டே இருந்தாள்.

அவளுடைய பட்டுப்பாதங்கள், தன்னுடைய தலையில் பட்டு ஆடுவதுபோல் நினைத்தான் அவன், அவளுடைய மாணிக்கக் கரங்கள் தன்னுடைய மார்பகத்தைத் தழுவுவது போல் உணர்ந்தான்; அவள் விழிகள் தன்னுடைய விழிகளை விழுங்குவதுபோல் கற்பனை செய்தான், அவள் இதழ்கள்; அவன் இதழ்களை...

அய்யோ—அதற்குள் கருங்கல் செதில் ஒன்று அவன் கண்ணில் தெறித்துக் குத்திக் கொண்டது; அவன் உளியைக் கீழே எறிந்துவிட்டு, 'அம்மா' என்று கதறிவிட்டான்!'

அவள் பதறிப்போனுள்; அவனைத் தாங்கிப் பிடித்து விழாமல் நிறுத்தினுள்; அவளது அழகிய கரங்களால் அவன் முகத்தை நிமிர்த்திக் கண்ணில் விழுந்த செதிலைக் காந்தள் விரலால் மிக இலாவகமாக எடுத்தெறிந்தாள்!

அவ்வளவுதான்—ஒருதிடீர் மின்னல்—அவளைத் தன்னுடைய பலம்கொண்டமட்டும் சேர்த்துப் பிடித்துத் தழுவிக் கொண்டான் அவன்!

மின்னலைத் தொடர்ந்து பேரிடி—பெரும் புயல்—பிரளயத் தாண்டவத்தின் பிரதிபலிப்பு

சாமுண்டி அவனைப் பிடித்துக் கீழே வேகமாகத் தள்ளிவிட்டாள்!

அவன் அலறிக் கொண்டு தரையில் மோதி விழுந்தான்; விழுந்தவன் சிறிது நேரம் எழவே இல்லை; அவன் கண்கள் சுழன்றன; சிற்பமண்டபமே சுழன்றது; அவன் செதுக்கிய எண்பத்தொரு சிலைகளும் சுழன்று ஆடின.

மானுடியது—பிறகு அது மிரண்டோடியது; மான், புலியாகமாறிப் பாய்ந்தாடியது; இறைவன் கழுத்தில் அணிந்திருந்ததாகச் செதுக்கப்பட்ட பாம்புகள் ஆயிரமாயிரம் படமெடுத்தாடின! இறைவன் கைநெருப்பு பல திக்கிலும் சூழ்ந்தாடியது!

இனியன், சுழலும் கண்களை நிலைநிறுத்தி எழுந்திப் பார்த்தான்—முடியவில்லை.

அப்போது, தேவீ என்று ஒரு குரல்கேட்டுச் சாமுண்டி திரும்பிப் பார்த்தாள்—திடுக்கிட்டுப் போனுள்.

இராஜேந்திரன் அவளை நோக்கிப் பரபரப்புடன் வந்து கொண்டிருந்தான். அவன் பின்னுல் இராசராசசோழரும், குந்தவைபாரும வந்தனர்.

சாமுண்டி இராசேந்திரனிடம் ஓடி, 'அத்தான்' என்று தழுவிக் கொண்டு கண்ணீர் வழிய வழிய விம்மி அழத் தொடங்கினுள்! 'அத்தான்—போதும் நான் செய்த கலைத் தொண்டு" என்று கதறினுள்!

இராசேந்திரன் அவளை இறுக அணைத்தவாறு ஆறுதல் மொழியில், 'பஞ்சவன் மாதேவி—கலைத் தொண்டினைப் பழிக்காதே; எவனே ஒரு கலைஞன் செய்த தவறுக்காகக் கலையின் மீதே வெறுப்புக் கொள்ளலாமா? பாவம்— இனியன், தெரியாமல் செய்த பிழைதான் இது; அவனைமன்னித்துவிடலாம்!"

இந்த உரையாடல் இனியனைத் தட்டி எழுப்பியது

அவள் யார்? — பஞ்சவன் மாதேவியா? அவள் சாமுண்டி இல்லையா? சாரப்பள்ளம் அழகியின் மகள் இல்லையா?

பஞ்சவன் மாதேவி — இராசேந்திரன் மனைவி; இராசராசனின் மருமகள்; அய்யோ — என்ன தவறு செய்துவிட்டோம்!

இனியனுக்கு 'இப்போது எங்கு நிற்கிருேம்' என்றே புரியவில்லை—அவன் செத்துக் கொண்டிருக்கிருன — அவனுக்கே தெரியவில்லை!

அழுது கொண்டிருக்கும் மருமகளிடம் வந்து இராசராசன் 'பஞ்சவன் மாதேவி— என்னுடைய கலை ஆசையை நிறைவேற்றுவதற்கு உன் கணவன் இராசேந்திரன் இட்ட கட்டளையை எனக்காக ஏற்றுக் கொண்டு நீ செய்த தியாகத்தை நான் என்றும் மறவேன்; உங்களுக்குத் துணையாக இருந்து உதவிய கிழவி அழகியை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை; அவள் உன்னைச் சிற்பக்கூடத்திற்கு அனுப்பியது மட்டுமல்ல — கண்ணும் கருத்துமாக இருந்து உன்னைப் பாதுகாத்தும் வந்திருக்கிருள்; நேற்றையதினம் அவள் கொடுத்த செய்திக்குப் பிறகுதான் சிற்பியின்மீது சந்தேகமுற்ற நாங்கள் இன்று இங்கு வந்தோம்; உனக்கு நாங்கள் அளித்த தொல்லைக்காக எங்களை மன்னித்து விடு' என்று கண்ணீர் பொங்கக் கூறினுன்.

"சக்கரவர்த்தி— அப்படிச் சொல்லாதீர்கள்" என்றவாறு அரசரின் காலில் விழுந்து வணங்கினுள் பஞ்சவன் மாதேவி!

'யார், யாரை மன்னிப்பது?" என்று அவள் அரசரைப் பார்த்துத் தேம்பும் குரலில் கேட்டாள்

"நாம் எல்லோரும் சேர்ந்து சிற்பி இனியனை மன்னித்து விடுவோம்' என்றவாறு அரசர் அவன் நின்ற பக்கம் திரும்பினர். அனைவரும் இனியன் பக்கம் திரும்பினர்; அவனை அங்கு காணவில்லை! அவன் ஓடினுன். ஓடினுன்.. யாரும் அவனைப் பிடித்து மன்னிக்க முடியாத தூரத்துக்கு ஓடியே போய்விட்டான்!

[குறிப்பு ' 'இராசராசன். இறைவனின் 108 தாண்டவ நிலைகளைப் பெரிய கோயில் மேல் தளத்தில் உட்பாகத்து அடி வரிசையில் சிற்பங்களாகச் செதுக்க ஏற்பாடு செய்தான்; வேலையும் நடந்தது; ஆனுல், எக்காரணம் பற்றியோ 81 சிற்பங்களைச்செய்து முடித்து. 82—வது தொடங்கி முடிக்காமல் விடப்பட்டிருக்கிறது" என்ற சரித்திரக் குறிப்பை அடிப்படையாக வைத்து இந்தக் கதை எழுதப் பட்டது.]

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணுவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் செலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானுல் ரூ. 3 அட்வான்சும். செயினுடன் டாலர் வேண்டுமானுல் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினுல் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"பேட்டோ வினஸ்" 104, C. N. K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

இருந்த இடத்தை எண்ணி இருக்குமிடத்தில் ஏக்கம்!

"இப்பொழுதெல்லாம் நான் எந்த ஊருக்காவது சென்ருல் இரயிலடியிலிருந்து நானே பெட்டியைத் தூக்கிக்கொண்டு, எந்த விடுதியில் அறை கிடைக்கும் என்று நானே தேடிச்சென்று தங்கவேண்டியுள்ளது. இரயிலடிக்குக்கூட ஒருவரும் வருவதில்லை. தி.மு.க.வில் நான் இருந்தபோது எந்த அளவு எனக்கு மரியாதை இருந்தது என்பதையும், இப்பொழுது எந்த அளவுக்கு அலட்சியப்படுத்தப்படுகிறேன் என்பதையும் எண்ணும்போது வேதனையாகத்தான் இருக்கிறது.

நான் ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது தற்செயலாக அங்கு வந்த நிருபர்கள், என்னைப் பார்த்துவிட்டு, "அடடே, நீங்கள் இங்கேயா தங்கியிருக்கிறீர்கள்; எங்களுக்கு யாரும் சொல்லவேயில்லையே" என்று வியப்புடன் கூறினர்கள்.

இந்தக் கசப்பான அனுபவத்தை, மிகவும் சலிப்புடன் வெளிப்படுத்திக்கொண்டவர் யாரென்று நினைக்கிறீர்கள்? சாட்சாத் அ.தி.மு.க. அவைத் தலைவர் நாவலர்தான். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நண்பரிடம்தான் இதனைக் கூறினராம். அந்த நண்பர் நாவலரின் இந்த வேதனை மிக்க நிலை கண்டு பரிதாபப்பட்டு, "மீண்டும் நீங்கள் தி.மு.க.விலேயே சேர்ந்துவிட்டால் என்ன?" என்று கேட்டாராம். அதற்கு, நாவலர், "அதெல்லாம் வேண்டாம்; என்னை தி.மு.க. தலைவர்கள் ஏற்றுக்கொண்டாலும் தி.மு.க. தொண்டர்களிடையே எனக்கு முன்பிருந்த மரியாதை கிடைக்காது" என்று கூறினராம்!

ஆளுங்கட்சிக்காரர்களின் நில ஆக்கிரமிப்பு!

சென்னை கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான இடத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் நில ஆக்கிரமிப்புச் செய்து குடிசை கட்டிக்கொண்டிருக்கிருர்கள், அந்த இடம். நூல் நிலையம் கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியத்தினுல் ஒதுக்கப்பட்டதாம். எனவே. அந்தக் குடிசைகளை அப்புறப்படுத்த வீட்டுவசதி வாரியம் நடவடிக்கை மேற்கொண்டது.

கடந்த 29-5-78 அன்று காலை 10 மணிக்கு அந்தக் குடிசைகளை போலீசுப் பாதுகாப்புடன் அப்புறப்படுத்த வீட்டு வசதி வாரியம் உரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இந்த நிலையில், வீட்டு வசதி வாரியத்தின் புதிய தலைவராக அ.தி.மு.க.வைச் சேர்ந்த பிரமுகர் நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உடனே அந்தக் குடிசைவாசிகள் அவரிடம் சென்று முறையிட்டனராம். அந்தப் புதியவரின் தலையீட்டின்பேரில், குடிசைகளை அகற்றும் நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டது. இன்னமும் அந்தக் குடிசைகள் அப்படியே இருக்கின்றன. அ.தி.மு.க. கொடியும் அங்கே பறந்துகொண்டிருக்கிறது.

இதில் என்ன வேடிக்கை என்ருல். தலைவராக அவர் நியமிக்கப்பட்ட செய்திதான் வெளியாயிற்றே தவிர அந்தப் பதவிப் பொறுப்பை அப்போது அவர் ஏற்றிருக்கவில்லை பதவியைஏற்பதற்கு முன்னதாகவே, கட்சிக்காரர்களைக் காப்பாற்றுவதற்காகத் 'தலையீடு' செய்யத் தொடங்கிவிட்டார் புதிய தலைவர்!

மந்திரக்கோல் மைனரின் மனச் சலிப்பு!

அடிக்கடி சவால் விட்டுக் கொண்டிருக்கும் 'மந்திரக்கோல் மைனருக்கு; கொஞ்சகாலமாக மந்திரிப் பதவியிலேயே சலிப்புஏற்பட்டுள்ளதாம். தன்னிச்சையாக எதையும் செய்ய அதிகாரமின்றி, எடுத்ததற்கெல்லாம், மூச்சு விடுவதற்குக்கூட முதல்வரைக் கேட்க வேண்டிய அவல நிலையை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லையாம். எம். ஜி ஆர். மந்திரிசபையில் நிதி மந்திரியாக இருப்பதைவிட நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினராக இருப்பதே மேல் என்று அவர் நண்பர்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிருராம்.

என்ன செய்தும், எப்படிப் பேசியும் முதல்வரின் முழு நம்பிக்கைக்கு ஆளான மந்திரியாகத் தம்மால் ஆக முடியவில்லையே என்றும் வேதனைப்படுகிருராம். புதிய மந்திரிகளுக்குத் தரும் மதிப்பைக்கூட, தனக்குக் கொடுக்க முதல்வர் மறுக்கிருரே என்றும் மனம புழுங்குகிருராம்.

எனவே, தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வந்தால். அதில் தாம் போட்டியிட எம். ஜி ஆரிடம் கேட்கப் போவதாகவும் கூறிக் கொண்டிருக்கிருராம்!

—'சேனு'

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

'நம் நாடு' கடிதங்களைக் களவாடும்

உளவாளிகள் யார்?

இந்தியாவின் இருண்ட நாட்களின்போது தொலை பேசிப் பேச்சுக்களை ஒற்றுக் கேட்பதும் கடிதங்களைத் 'திருட்டுத்தனமாகப் பிரித்துப் பார்த்த பிறகு கிழித்துப் போடுவதும் வாடிக்கையாக இருந்தன.

'இரண்டாவது விடுதலைப் போராட்ட வீரர்கள்' என மதித்துப் போற்றப்படும் ஜனதா கட்சியினரின் இன்றைய ஆட்சியிலும் பழைய 'உளவு பார்க்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவே தெரிகிறது.

நம் நாடு அலுவலகமான 'அன்பகம்' முகவரிக்கு வருகின்ற கடிதங்கள் கட்டுரைகள் அனைத்தும் – துப்பறியும் துறையினரால் பிரித்துப் பார்க்கப்படுகின்றன. சில கடிதங்கள் கிழித்தெறியப் படுவதாகவும் தெரிகிறது.

'நம் நாடு' அலுவலகத்திற்கு வரவேண்டிய பல கடிதங்கள் வராமல் போவதற்கான காரணம் இப்போதுதான் புரிகிறது.

சில கட்டுரைகளுடன் கட்டுரையாளர்களால் அனுப்பப்படும் அஞ்சல் தலைகளெல்லாம் கூட 'அபேஸ்' ஆகிவிடுகின்றன.

எடுத்துக்காட்டாக—

நம் நாடு அலுவலகத்திற்கு வரும் கடிதங்களைத் துப்பறியும் துறையினர் பிரித்துப் பார்த்து 'கையும் களவுமாக பிடிபட்ட செய்தி அண்மையில் 'முரசொலி'யில் வெளியானது நினைவிருக்கலாம்.

இதேபோல் அன்பகத்துத் தொலைபேசிப் பேச்சுக்களும் துப்பறியும் துறையினரால் ஒற்றுக் கேட்கப்படுகின்றன.

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தவுடனேயே, 'தொலைபேசிப் பேச்சுக்கள் ஒற்றுக் கேட்கப்படுவதோ, கடிதங்கள் தணிக்கை செய்யப்படுவதோ இப்போது எங்கும் கிடையாது; அப்படிச் செய்வது சட்டப்படித் தவறு' என்றும் அறிவித்தது.

ஆனால், இன்னமும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை அந்தத் தவறான — சட்டத்திற்குப் புறம்பான—'உளவு' செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

—இத்தவறை செய்வது மத்திய அரசாக இருக்காது என நம்புகிறோம்.

மாநில அரசுதான் இந்தச் சட்டமீறலைச் செய்ய முனைந்திருக்கிறது என்றால் இதனைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு உடனடியாக முன் வருமா?

கலைஞர் கடிதம். . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, பிரதாபச்சந்திரனின் மறக்க முடியாத இந்த நினைவு நாளில் தொழிலாளர்களின் சக்தியை ஒன்று திரட்டி ஒருமுனைப்படுத்தும் செயலில் நமது தொழிற் சங்கப் பேரவை ஊக்கத்துடன் ஈடுபடவேண்டும்.

பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள்; அவை தவிர்க்க முடியாதவை என்று ஆகிவிட்டபோதிலும் நியாயமான தேவைகளையும், உரிமைகளையும்பெற கழகச் சார்புடைய தொழிற் சங்கம், எந்த ஒரு தொழிற்சங்க அமைப்புடனும் அணிவகுக்கத் தயாராக இருக்கிறது. அதேபோன்று, கழகப் பேரவையும் மற்ற அமைப்புகளின் துணையை வரவேற்கிறது!

இந்த அடிப்படையில் கழகத்தின் தொழிற்சங்கப் பேரவையின் அமைப்புக்கள் இருக்குமிடங்களில் எல்லாம் அவற்றில் தங்களை இணைத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள் நமது கழகத் தொழிலாளர்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன், தளபதி பிரதாபன் கண்ட கனவு நிறைவேற — தொழிலாளர் இயக்கத்தின் கொடியை உயரப் பறக்க விடுவோம்! அதுவே அந்த வீரத்திருமகனின் நினைவுநாளில் நாம் முழக்கிடும் சபதமாக அமையட்டும்.

அன்புள்ள

மு.க.

முயற்சி திருவினையாக்கும்

அவர் ஓர் இடையரின் மகன்; பம்பாய் பழக் கம்பெனி ஒன்றில் சிப்பந்தி வேலை செய்தார்; இளமைப் பருவத்தில் கல்லூரிப் பக்கம் காலடி வைத்தது கிடையாது. தானே முயன்று வருந்தி வளர்த்துக் கொண்ட பொது அறிவை அடிப்படையாக வைத்து பக்தார் செய்தி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

செய்தியாளராக வாழ்வைத் துவக்கிய அவர் பிற்காலத்தில் புகழ்பெற்ற பத்து நாவல்களையும் எழுதி குவித்தார் இவர் யாரென்று தெரிகிறதா? இவர்தான் மின்னல் வெட்டுப்போல நடந்துமுடிந்த புரட்சிமூலம் ஆப்கானிஸ்தானின் அதிபராகியுள்ள நூர்முகம்மது தராகி.

'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கு இவர் ஒரு நடமாடும் எடுத்துக்காட்டு!

கனவு பலிக்காது!

- கலவை. பா. வரதன் -

நெருக்கடி நிலையை மிகவும் உறுதியாக எதிர்த்து நின்றது என்ற எரிச்சலின் காரணமாக ஏற்படுத்தப்பட்டதுதான் சர்க்காரியா விசாரணைக் கமிஷன் என்பதை மிகச் சாதாரண அரசியல் அறிவுடைத்த எளிய பாமரன் கூட ஒப்புக் கொள்வான்! சர்க்காரியாவின் அறிக்கை கிடைத்தவுடன் மிகவும் புளகாங்கிதமடைந்து போன மகானுபாவர் எம். ஜி. ஆர் தான்.

அறிக்கை கிடைத்த அடுத்த நிமிடமே ஆவேசத்துடன் கருணாநிதி மீது நடவடிக்கை! என்று எதிறி குதித்திருக்கிறார் சர்க்காரியா கமிஷனின் தீர்ப்புப்படி 'கருணாநிதியை சிறைச்சாலைக்கு அனுப்புவோம்'' இவ்விதம் முட்டாள்தனமாக உளறிக் கொட்டியிருக்கும் 'உத்தமர்' எம். ஜி ராமச்சந்திரனுக்கு ஒன்றை தெளிவுபடுத்தவேண்டியது நமது அத்தியாவசிய கடமை ஆகிறது.

நடப்பது மக்களாட்சி— மன்னராட்சி அல்ல

அவ்வளவு எளிதில் எவரையும் ஜெயிலில் தள்ளிவிட முடியாது! கலைஞரை மட்டுமல்ல-நாட்டின் மிக மிகச் சாமான்யமான ஒரு பாமர மனிதனைக் கூட பழி தீர்த்துக் கொள்ளும் வகையில் அவ்வளவு சுலபமாக சிறைக்கு அனுப்பி விட முடியாது. இந்த அடிப்படை உண்மையை — எழுத்தறிவற்ற குப்பனுக்கும் — சுப்பனுக்கும் கூட புரிகிற இந்தப் பேருண்மை — நான்கு கோடி மக்களை துரதிருஷ்ட வசமாக ஆளவந்து விட்ட எம். ஜி ஆருக்குப் புரியாமல் இருப்பதற்காக வருத்தப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் எம். ஜி ஆரும்—அன்றைக்கு அத்தியந்த நண்பராயிருந்த காம்ரேட் கல்யாண சுந்தரமும் டெல்லி எஜமானர்களிடம் கொண்டு போய் கொடுத்த புகார்களின் மொத்த எண்ணிக்கை 56.

இந்த 56 புகார்களில் பசை உள்ள புகார் எது எது என்று துருவித்துருவி ஆராய்ந்து பார்த்த பிறகு—பாதிப் புகார்களில் கிஞ்சித்தும் ஆதாரம் இல்லை—அடிப்படை இல்லை என்று அம்மேதைகளாலேயே தள்ளப்பட்டது!

மீதமுள்ள இருபத்தெட்டு குற்றச் சாட்டுகள் குறித்து விசாரணை செய்யப்பட்டதில் பதினான்கு புகார்களுக்கு மட்டுமே ஆதாரம் இருப்பதாக அவர்களே கூறியிருக்கின்றனர் தெளிவாகவும்—பச்சையாகவும் கூறுவதாயின் முக்கால் வாசிப்புகார்கள் எடுத்த எடுப்பிலேயே—ஆரம்பக் கட்டத்திலேயே தாக்குப் பிடிக்க முடியாமல் சுக்கு நூறாக உடைந்து நொறுங்கி விட்ட பரிதாபத்தைப் பார்க்கிறோம்!

ஏற்பட்டு விட்டமன அரிப்பையும்—மூண்டுவிட்ட பொறாமைத் தீயையும் போக்கிக் கொள்வதற்காகப் பொறுப்பற்ற சில பொல்லாங்குக்காரர்களால் ஜோடிக்கப்பட்ட இந்தப் புகார்களில் கூட—இறுதியாக எஞ்சி நிற்கும் பதினான்கு புகார்கள்—கற்பனை செய்யப்பட்ட சாட்சியங்களை—குறுக்குக் கேள்விகள் கேட்டு எதிர் வழக்காட அனுமதி தராமல், அமைக்கப்பட்டதுதான் சர்க்காரியா விசாரணை.

இதைப்பற்றி தனது கருத்தினை வெளியிட்ட கலைஞர் ''இவ்வளவுக்குப் பிறகும் எம். ஜி. ஆர். கொண்டு போய்க் கொடுத்த குற்றச் சாட்டுகளில் 28 குற்றச் சாட்டுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் முனை முறிந்து விழுந்து விட்டன. மீதமுள்ள 28 குற்றச் சாட்டுகளிலும் 14 குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லையென்று நீதிபதி சர்க்காரியா தள்ளுபடி செய்து விட்டார்.''

'நாங்கள் கோரிய படி சாட்சியங்களையும்—புகார் கொடுத்த எம். ஜி. ஆர், போன்றவர்களையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டிருக்குமாயின் எந்தப் புகாரும் நிற்காது! அடிபட்டுப் போயிருக்கும்'' என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆக சர்க்காரியா கமிஷன் 'கண்டு பிடிப்புகளைக் காட்டி கலைஞரைச்சிறையில் அடைக்க எம். ஜி ஆர், காணும் கனவு ஒருக்காலும் பலிக்காது!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009